பக்கங்கள் - 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 21 ஞாயிற்றுக்கிழமை 05.03.2023 கதிர் 116




Yarl Smart Water Solution
YARL SMART
Water Solution
"Smart Water, Smart Life"
அதிரடி விலைக்கழிவு
65,000/-
40,000/-
NEXUS
OPEL
Next
No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044, | 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com
நீர் சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு
தீர்வாக நாங்கள்

காலைக்கதிர்
Kalaikkathir

## இது ரகசியம் அல்ல!

வெளிநாட்டில் போயிருந்து பணத்தை எப்படியாவது சம்பாதித்துக்கொண்ட பிறகு அதைக் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் ☞04

ஊழல், மோசடிக்குப் பொறுப்பேற்று

# கல்முனை மேயர், பிரதி மேயர் உடன் பதவி விலகவேண்டும்

### ஐக்கிய மக்கள் கட்சி வலியுறுத்து



(அகீல்)

கல்முனை மாநகர சபை ஊழலை (நிதி கையாடல் மோசடி) வன்மையாகக் கண்டித்துள்ள ஐக்கிய காங்கிரஸ் கட்சி நடந்த குற்றத்திற்குப் பொறுப்பேற்று கல்முனை மேயரும் பிரதி மேயரும் உடடனடியாகப் பதவி விலக வேண்டும். ☞04

# தேர்தலுக்கான திகதியை உடன் அறிவிக்கவேண்டும்

### லக்ஷ்மன் கிரியெல்ல அழுத்தம்

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்க்கமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அதற்கமைய நிதி அமைச்சால் இனியும் நிதியைத் தடுக்க முடியாது.

எனவே தேர்தல் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தன்மையைப் பயன்படுத்தி வெகுவிரைவில் தேர்தலை நடத்துவதற்கான தினத்தை அறிவிக்க வேண்டும். ☞04



# தேயிலை மலையில் யுவதியின் சடலம்

### விசாரணை வேட்டை ஆரம்பம்

புஸல்லாவ, சோகம தோட்டத்தில் உள்ள தேயிலை மலையிலிருந்து யுவதி ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

புஸல்லாவ, எல்பொட பகுதியைச் சேர்ந்த சதாசிவம் நிரஞ்சளா என்ற 25 வயது யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள், சடலத்தைக் கண்ட பிறகு அது தொடர்பில் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்துள்ளனர். தொடர்ந்து புஸல்



லாவ பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளைத் தொடங்கினர்.

கம்பளை உதவி நீதிவான் நந்தினி காஞ்சிலதாவின் விசாரனையின் பின் மேலதிக பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலைக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டது.

# முதலில் எந்தத் தேர்தல்? ஊகிக்க முடியவில்லை

### இப்படிச் சொல்கிறார் பஸில்

**நாட்டில் எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று எம்மால் ஊகிக்க முடியவில்லை. ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவே வெற்றியடையும்.**

**இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.** ☞04



# இது தேர்தல் காலம் அல்ல!

### ரணிலின் சகா பழைய பல்லவி



நாட்டின் நிலைமையைத் தெரிந்துகொண்டும் சிலர் தேர்தல் வேண்டும் என்று பிடிவாதமாகச் செயற்படுகின்றனர். இது தேர்தல் காலம் அல்ல. அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நேரமே இது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தேர்தலை நடத்தக் கூடிய நிலைமை இல்லை என்று தெரிந்தும்கூட சிலர் தேர்தல் வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர்.

இப்போது தேர்தல் நடக்காது என்ற துணிவில்தான் அவர்கள் ☞04




# தலைவர் பதவியை தூக்கிப்போட தயார்

### ஜி.எல்.பீரிஸூம் பதிலடி



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியை பெருமையாக கொள்ளவில்லை, அந்த பதவியை துறக்க தயாராகவே உள்ளேன். நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் எமது அணியினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அந்தக் கட்சிக்குக் கிடையாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவரைக் கட்சியை விட்டு வெளியேற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று தீர்மானம் எடுத்துவிட்டதாகக் கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் சனிக்கிழமை தெரிவித்திருந்தார். ☞04

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது வடக்கு கிழக்கில் முதலிட்டுத் தமது அரசியல் ஆசையை, நோக்கத்தை அந்தப் பணத்தின் மூலம் அடைந்து விடத் துடிக்கும் "பிரகிருதிகள்" எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தே வருகின்றது. அப்படி வருபவர்களில் பலரும் தங்கள் பெயர்களின் உச்சரிப்பை ஆங்கிலத்தில் மாற்றிக்கொண்டு ஏன் பயன்படுத்துகின்றார்கள் என்பதுதான் புரியாத புதிராக இருக்கின்றது. அத்தகையவர்களின் பெயர் மாற்றத்தின் பின்னணியில், அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்களுக்கிருக்கும் குற்றப் பின்னணிகள் பற்றி யாராவது புலனாய்வு செய்து கட்டுரைகளை வெளியிட்டால் நன்றாக இருக்கும்.

அண்மையில் இந்தப் பத்தியில் அது போன்றதொரு மோசடி குறித்துச் சொல்லியிருந்தேன். ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் அரசியல் செயலாளராக இருந்த ஒருவரும், கூட்டமைப்பின் பிளவுக்கு அந்தப் பக்கத்தில் மூளையாகச் செயற்பட்டவருமான ஒருவர் தனது இலங்கைக் கடவுச் சீட்டை மாற்றும்போது அதில் நைசாக இதேபோன்று தனது தமிழ்ப் பெயருக்கான ஆங்கில உச்சரிப்புக்கான எழுத்துக்களை முதல் கடவுச்சீட்டில் இருந்ததில் இருந்து எப்படியோ மாற்றி புதிய கடவுச் சீட்டைப் பெற்றிருந்தார் என்கிற சிக்கல் நீதிமன்றம் வரை போயிருப்பதைச் சொல்லியிருந்தேன் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இன்றும் அதுபோன்றதொரு தகவல். இது ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவர் பற்றியது. அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணம் வந்து சென்றதிலிருந்து இந்த அமைப்பாளரைப் பற்றிய சர்ச்சை கடுமையாக ஓடித்திரிகின்றது. இவர் முன்னர் ஈபிடிபி ஆட்களைப் பிடித்துக்கொண்டு நல்லூரில், புனித வளாகம் என்று கூறப்படும் பகுதிக்குள் ஒரு உல்லாச விடுதியை மச்சம் பயன்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கினார் என்ற சர்ச்சை இருந்தது. அந்த விடுதி இப்போதும் செயற்படுகின்றது. வேடிக்கை என்னவென்றால் வெளிநாடொன்றில் இவர் கோயில் ஒன்றின் உரிமையாளராகவும் இருக்கிறாராம். (வாழ்க ஆன்மிகம்)

இந்த அமைப்பாளரும் இலங்கையில் தான் பயன்படுத்தும் பெயர்களில், ஆங்கிலத்தில் தனது பெயர் குறிப்பிடப்படும் இடத்தில் நைசாக வேறு எழுத்தைப் பயன்படுத்துகிறார். ஆனால் அவரது கடவுச் சீட்டில் அந்த எழுத்து வேறாக இருக்கின்றது. இப்படி தங்கள் ஆள் அடையாளங்களில் இந்தப் புலம்பெயர் அரசியல் விரும்பிகள் ஏன் மாற்றம் செய்கிறார்கள் என்பது பற்றிச் சின்னதாக விசாரித்துக்கொண்டு போகும்போது, இந்த அமைப்பாளர் பற்றி சிங்கள இணையத் தளம் ஒன்றில் வந்திருந்த விரிவான கட்டுரையை அனுப்பி வைத்தார் நண்பர் ஒருவர்.

அதில் அக்குவேறு ஆணிவேறாக இந்த அமைப்பாளரின் குற்றப் பின்னணியிகள், விவரங்கள், எல்லாம் ஆவண சாட்சியங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றது. அதில் சொல்லப்பட்டிருப்பவை எல்லாவற்றையும் நான் இங்கே சொல்ல முடியாது. அதில் சில சொல்லவே முடியாதவைகளும் கூட. முக்கியமான ஒன்றைப் பற்றிச் சொல்லலாம். பிரான்ஸ் நாட்டில் இவர் இருந்தபோது அந்த நாட்டுச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்ட குற்றவாளியாம் இவர். அதுவும் சட்டத்திற்குப் புறம்பாக, அகதிகளை வேலைக்கு வைத்து அவர்களின் உழைப்பைச் சுரண்டினார் என்ற குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டவராம்.

போதாக்குறைக்கு தனது உண்மையான வயதை மறைத்து 11 வயதைக் குறைத்துக்காட்டி தேசிய அடையாள அட்டையையும் அவர் பெற்றிருக்கிறார் என்று அந்தக் கட்டுரை ஆவண ஆதாரத்துடன் வெளிப்படுத்தியுள்ளது. அதாவது 1958இல் பிறந்தவர் என்றுதான் அவரது கடவுச்சீட்டும் 2003இல் எடுத்த இலங்கை தேசிய அடையாள அட்டையும் காட்டுகின்றன. ஆனால், பின்னர் எடுத்த அடையாள அட்டையில் 1969இல் பிறந்தவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன் இந்த மாற்றம் என்பதற்கு அந்த சிங்கள இணையத்தளம் எழுதியிருக்கும் காரணத்தை நான் இங்கே சொன்னால் என்னை நீங்கள் கேவலமாகப் பார்ப்பீர்கள் என்பதால் அதை நான் சொல்லவில்லை.

போதாதற்கு போலியாக ஆண்டு மாற்றப்பட்ட அடையாள அட்டையில் அவரது பெயரின் மதல் எழுத்தும் மாற்றப்பட்டுள்ளது. ஒலி உச்சரிப்பு சரியாக வந்தாலும் எழுத்து மாற்றப்பட்டுள்ளது.

இத்தகைய கிரிமினல் வேலைகளை எல்லாம் அவர்கள் திட்டமிட்டுச் செய்து இலங்கையில் வாழவேண்டிய அளவிக்குத் தேடப்படும் குற்றவாளிகளா என்பதுதான் எனது கேள்வி எல்லாம்.

வெளிநாட்டுக் குற்றவாளிகளுக்கு வெள்ளையடித்து அவர்களை இங்கு தொழிலதிபர்களாகக்காட்டி, மக்கள் பிரதிநிதிகள் என்று அரசியல்வாதிகளாகவும் ஆக்கிக்கொள்ளுவதுதான் இன்றைய அரசியல் கட்சிகளால் செய்யப்படும் தொண்டு போல உள்ளது. அரசியலில் ஒருத்தர் இறங்குவதற்கு முன்னர் அவரிடம் பணம் கொட்டிக்கிடக்கிறதா என்று பார்க்காமல், பண்பும் நேர்மையும் இருக்கிறதா என்று பார்க்கவேண்டியதுதான் அரசியல் கட்சிகளின் முதல் பணி. செய்வார்களா? ஏழை சொல் அம்பலமேறாதுதானே வாசர்களே!

- இடிமின்னல் -

## முதலில் எந்தத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து பிற்போட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் தொடர்பில் காலைக்கதிர் பத்திரிகையிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடமும் அடுத்த வருடமும் தேர்தல்களுக்கான வருடங்கள். ஆனால், எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்று எம்மால் ஊகிக்க முடியவில்லை. தேர்தல் தொடர்பில் எல்லோரிடமும் சந்தேகங்கள் எழுகின்றன.

எந்தத் தேர்தல் நடந்தாலும் அதை எதிர்கொள்ளும் திராணி ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிடம் உண்டு.

எந்தத் தேர்தல் நடந்தாலும் மொட்டுக்கட்சி வெல்வது உறுதி. உள்ளூராட்சி சபைத்தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என மூன்று தேர்தல்களையும் மொட்டுக் கட்சி சந்தித்தது. எந்தத் தேர்தலிலும் தோற்ற வரலாறு மொட்டுக் கட்சிக்கு இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது போல் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மாத்திரம்தான் அரசை மாற்ற முடியும்.

அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் தொடர்ந்து பிற்போட முடியாது. மக்களின் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட வேண்டும். - என்றார்.

## கல்முனை மேயர், .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் மூலமே நேர்மையான விசாரணையை காண முடியும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி அக்கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்ததாவது,

மஹிந்த கோட்டா ஆட்சியில் ஊழல் நடந்த போது மஹிந்த, கோட்டா பொறுப்பல்ல, நிர்வாக உத்தியோகத்தர்கள்தான் பொறுப்பு என யாரும் சொல்லவில்லை. மாறாக அவரின் கட்சி, அவரின் கட்சிக்கு நாடாளுமன்றில் ஆதரவு கொடுத்த கட்சிகள் என அனைவரையும் நம் சமூகமும் சேர்ந்து குற்றம் சுமத்தியது.

கல்முனை மாநகர சபையில் நடந்த கொள்ளைக்கு முஸ்லிம் காங்கிரசையோ, கூட இருந்த அ.இ.மக்கள் காங்கிரசையோ, பார்த்துக்கொண்டு நே என்றிருந்த தேசிய காங்கிரசோ காரணமில்லை என சிலர் கூறுவது ஊழலுக்கு ஆதரவளிப்பதாகும்.

மஹிந்த கோட்டா ஆட்சியில் நடந்த கொள்ளைக்கு மஹிந்த கட்சியும் அவரது கட்சியை நாடாளுமன்றில் ஆதரித்த அனைத்து கட்சிகளும் காரணம். கொள்ளையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ எல்லோருக்கும் பங்குண்டு.

அதே போல் கல்முனை மாநகர சபை கொள்ளையில் ஹக்கீமுக்கும் அவரது கட்சிக்கும் அக்கட்சியின் ஆட்சிக்கு ஒத்துழைத்த கட்சிகள், சுயேச்சைகளுக்கும் பங்குண்டு என்பதே உண்மை.

அதே போல் இப்பிரச்சினையை சிவில் அமைப்புக்களால் மட்டும் தீர்க்க முடியாது. சிவில் அமைப்புக்கள் சாதித்தது எதுவும் இல்லை. கடைசியில் பண பலம் உள்ள கட்சிகளுக்கு அவர்கள் விலை போவார்கள்.

கல்முனை ஊழலை அரசியல் மயப்படுத்தினால் மட்டுமே முஸ்லிம் காங்கிரஸினர் பயப்படுவார்கள். அல்லாமல் சிவில் மயப்படுத்தினால் போதும் என்றிருந்தால் இப்பிரச்சினையை கல்முனையை ஆள்வோர் கணக்கே எடுக்க மாட்டார்கள். காரணம்,

பொது அமைப்புக்கள் என்றால் தேர்தல் வந்ததும் பண பலம் படைத்த கட்சிகளுக்கு விலை போவார்கள் என்பதுதான், அல்லது ஊழல் கட்சிகளுக்கெதிராக தேர்தலில் நடு நிலை என ஏமாற்றிக்கொண்டு இதே பொது அமைப்புக்கள் பேசாமல் மௌனமாக இருப்பர் என்பது முஸ்லிம் காங்கிரஸினருக்கும் ஏனைய ஏமாற்று கட்சிகளுக்கும் நன்கு தெரியும்.

ஆகவே கல்முனை மக்கள் இந்த ஊழலுக்கெதிராக ஜனநாயக ரீதியில் கல்முனையில் ஆர்ப்பாட்டம் செய்து இப்பிரச்சினையை தேசிய மயப்படுத்துமாறு ஐக்கிய காங்கிரஸ் கட்சி அழைப்பு விடுக்கிறது.

## தேர்தலுக்கான ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வலியுறுத்தியிருக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல. சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சியில் தேர்தலை நடத்தப் போதிய நிதி உள்ளது என்பதை எம்மால் காண்பிக்க முடியும். கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு வரிவருமானம் இருமடங்கு அதிகரித்துள்ளது. அதேபோன்று ஆட்சியின் வீண் செலவுகளைக் குறைக்கும் பட்சத்தில் பெருமளவு நிதியையும் சேமிக்க முடியும்.

நாட்டை நிர்வகிக்க முடியவில்லையாயின் ஆட்சியை ஒப்படைத்து விட்டுச் செல்லவேண்டுமே தவிர , தேர்தலைக் காலம் தாழ்த்தக் கூடாது. சுதந்திரத்தின் பின்னர் எந்தவொரு ஆட்சியும் நாட்டை வங்குரோத்தடையச் செய்யவில்லை. ஆனால் இந்த ஆட்சிதான் சர்வதேசத்திடம் தாம் வங்குரோத்தடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 15 நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளபோதிலும் அந்த நிபந்தனைகள் குறித்து இதுவரையில் நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுத்தப்படவில்லை. எமது ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி இந்தத் தீர்மானங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்க்கமான உத்தரவினைப் பிறப்பித்துள்ளது. தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் முயற்சித்தால் நாம் சர்வதேசத்தை நாடுவதற்கு தீர்மானித்திருந்தோம். எனினும் அதிஷ்டவசமாக எமது எதிர்பார்ப்பிற்கமைய நீதிமன்ற தீர்ப்பும் அமைந்துள்ளது.

அதற்கமைய நிதி அமைச்சினால் இனியும் நிதியை வழங்க முடியாது எனக் கூறிக் கொண்டிருக்க முடியாது. எனவே தேர்தல் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தன்மையைப் பயன்படுத்தி வெகுவிரைவில் தேர்தலை நடத்துவதற்கான தினத்தை அறிவிக்க வேண்டும் என்றார்

## இது தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பிடிவாதமாகச் செயற்படுகின்றனர்.

முதலில் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவோம். அதன் பின்னர் தேர்தலை நடத்துவோம் - என்றார்.

## தலைவர் பதவியை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பில் பீரிஸ் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி யாப்பு கொள்கைக்கும், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கும் எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கும், கட்டளைக்கும் அமைய இன்று செயற்படுகிறது.

அடிப்படைக் கொள்கைக்கு முரணாகச் செயற்படமுடியாது என்ற காரணத்தினால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆட்சியில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் 33 பேரை உள்ளடக்கிய ஒரு சுயாதீன அணியாகச் செயற்படுகிறோம்.

ஆட்சியாளர்களின் முறையற்ற செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டும் சுயாதீனத் தரப்பினரை அரசியல் மட்டத்தில் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஊடாக முன்னெடுக்கப்படுகிறது.

கட்சியின் கொள்கைக்கு அமைய செயற்படுவதால் கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எமக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் நாங்கள் பொது ஜன பெரமுனவின் கொள்கையை எந்தக் காரணிகளினால் மீறியுள்ளோம் என்பதை சாகர காரியவசம் தெளிவுப்படுத்தவில்லை.

எமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொதுஜன பெரமுனவிற்கு கிடையாது, முறையற்ற வகையில் செயற்பட்டால் நீதிமன்றத்தை நாடுவோம்.

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்து என்னை நீக்குவதாக குறிப்பிடப்படுகிறது. நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு வழங்கிய மக்களாணை முழுமையாக இல்லாதொழிந்துள்ளபோது தவிசாளர் பதவியை வகிப்பதை நான் பெருமையாகக் கொள்ளவில்லை. பதவி துறக்க தயாராகவே உள்ளேன்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் கட்சி பலவீனமடைந்துள்ளது.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை விளங்கிக் கொள்ள முடியும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இல
076 443 8622




















# இலங்கையின் முன்னணி முதலீட்டு நிறுவனத்துடன் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யுங்கள்

First Capital
A Janashakthi Group Company

| | |
|---|---|
| 29%* | 3 மாதங்கள் |
| 28%* | 6 மாதங்கள் |
| 27%* | 12 மாதங்கள் |

- பாரம்பரிய வைப்புகளுக்கு உயர் வட்டி விகிதம்
- இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதம் வழங்கப்படுகின்றது.
- எங்களின் அழைப்புமையம் (Call Centre) ஊடாக நேரடியாக அணுகலாம்.
- முதிர்வுகள் மற்றும் மீளப் பெறுதல்களுக்கு விரைவான தீர்வு
- முதலீட்டு ஆலோசனைகள் மற்றும் சந்தைசார் தகவல்கள் First Capital Research பிரிவினால் வழங்கப்படும்.

*வருடத்திற்கு

மார்ச் 03/04/05 ஆம் திகதிகளில்

யாழ் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் First Capital நிறுவனத்தினரை சந்திக்க முற்றவெளி மைதானத்திற்கு (Stall No.90) வருகைத் தாருங்கள்

அல்லது 0777 704 565 இற்கு அழையுங்கள்.

Address: No. 02, Deal Place, Colombo 03, Sri Lanka. | Email: info@firstcapital.lk | Website: www.firstcapital.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் தொடர்பில் தெளிவான தீர்மானத்தை அறிவிக்கவேண்டும்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை திறைசேரிச் செயலரோ நிதி அமைச்சரோ அல்லது வேறு எந்தவொரு அரச அதிகாரியுமோ விடுவிப்பதற்கு மறுக்கக்கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தாலும் தேர்தல் நடக்குமா இல்லையா என்பதில் ஒரு தெளிவின்மை தொடர்ந்தும் நிலவுகின்றது. நீதி, நிர்வாகத்துறை மீது வைத்திருப்பதைவிட "நரித்தனத்தின்" மீது மக்களும் அரசியல்வாதிகளும் கொண்டிருக்கும் நம்பிக்கைப் பலத்தால் இந்தத் தெளிவின்மை தொடர்கின்றது.

தேர்தலை நிறுத்துவதென்பது மக்களின் மக்களாட்சி (ஜனநாயக) உரிமையை, அடிப்படை உரிமையை மறுப்பது மட்டுமல்ல அதற்கும் மேலான உரிமை மீறல் என்று தமது உத்தரவின்போது உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நீதித்துறை சொல்வதைக் கேட்டு அதன்படி செயற்படத் தயார் என்று நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டியவும் தெரிவித்திருக்கிறார்.

அப்படியிருந்தும் தேர்தல் உடனடியாக நடத்தப்படும் என்கிற நம்பிக்கை மக்களிடமும் அரசியல்வாதிகளிடமும் வரவில்லை. தேர்தல்கள் ஆணைக்குழு பங்குனி 7ஆம் நாள், வரும் செவ்வாய்க்கிழமை திறைசேரிச் செயலாளர், அரச அச்சகப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்து தேர்தலை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளது. இந்தச் சந்திப்பே தேர்தலைப் பிற்போடுவதற்கான உள்நோக்கம்கொண்டதுதான் என்கிற சந்தேகம் சில அரசியல் தரப்புகளிடம் உள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானது, நீதிமன்றமேகூட இப்போது ஆணைக்குழுவிற்கு ஆதரவாக முடிவைத் தெரிவித்துவிட்டது, இந்த நிலையில் அதிகாரிகளுடன் ஆணைக்குழு கலந்துரையாடவேண்டிய தேவை எதுவும் இல்லை, ஆணைக்குழு சொல்வதை அதிகாரிகள் ஏற்று நடக்கவேண்டியவர்களாகவே உள்ளனர். அப்படிப்பட்ட நிலையில் அவர்களுடன் கலந்துரையாடுவது உள்நோக்கம் கொண்டது என்பது அந்தத் தரப்பினரின் வாதம்.

ஆனால், ஏற்கனவே ஒரு தடவை தேர்தலுக்கான திகதிகளைத் தன்னிச்சையாக அறிவித்துவிட்டு அதனை நடத்த அரச அதிகாரிகள் ஒத்துழைக்காத காரணத்தால் ஒத்தி வைக்கவேண்டிய நிலைக்கு வந்திருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் அதுபோன்ற நிலமை வராமல் இருப்பதற்காக அதிகாரிகளுடன் தீர்க்கமாக ஆராய்ந்த பின்னர் அதனைச் செயற்படுத்த நினைப்பதிலும் நியாயம் இல்லை என்று சொல்லிவிட முடியாது.

எப்படியிருப்பினும் தேர்தல் தொடர்பான தெளிவான நிலைமை வேட்பாளர்களுக்கும் மக்களுக்கும் இருக்க வேண்டியது அவசியம். இந்த நிச்சயமற்ற நிலமை காரணமாக, வேட்பாளர்கள் பலர் தமது பரப்புரைகளை ஏற்கனவே நிறுத்திவிட்டார்கள். நடக்காத தேர்தலுக்கு எதறகாகச் செலவிடவேண்டும் என்பது அவர்களின் சிந்தனையாக இருந்திருக்கக்கூடும். எனவே தேர்தல் தொடர்பில் தெளிவான ஒரு நிலைப்பாடு மக்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டியது அவசியம்.

ஆணைக்குழு புதிய தேர்தல் திகதியை அறிவித்தாலும்கூட, பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கும் நடவடிக்கைகான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதற்கூடாகத் தேர்தலை அரசு நிறுத்திவிடக்கூடும் என்கிற அச்சமும் பலருக்கும் இருக்கின்றது.

இதனால் தேர்தல் பற்றிய தெளிவை ஆட்சியாளர்கள் உடனடியாக வழங்கவேண்டியது அவசியம். மக்களையும் வேட்பாளர்களையும் திரிசங்கு சொர்க்கத்துக்குள் நிற்கவைக்காமல் உடனடியாக இதற்கொரு தீர்வு காணப்படவேண்டும்.

# நாணய நிதிய நிபந்தனைகள்படி கொள்கை வட்டி வீதம் அதிகரிப்பு

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக வைப்புவசதி வீதம் மற்றும் கடன்வசதி வீதம் ஆகிய கொள்கை வட்டிவீதங்கள் 100 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரிக்கப்படுகின்றன என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான அனைத்து முன்நிபந்தனைகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன எனவும், எனவே வெகுவிரைவில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாணயச் சபையின் இந்த வருடத்துக்கான இரண்டாவது கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே ஆளுநர் நந்தலால் வீரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியின் நாணயச்சபை கொள்கை வட்டிவீதங்களை 100 அடிப்படைப்புள்ளிகளால் அதிகரிப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றது. அதன்படி முன்னர் 14.50 ஆகக் காணப்பட்ட துணைநில் வைப்பு வசதிவீதம் தற்போது 15.50 சதவீதமாகவும், 15.50 ஆகக் காணப்பட்ட துணைநில் கடன் வசதிவீதம் தற்போது 16.50 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பு ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கியாலும், சர்வதேச நாணய நிதியத்தாலும் நாட்டின் பணவீக்கம் தொடர்பில் மதிப்பிடப்பட்டது. அதன்படி 2022 டிசெம்பர் மாதமளவில் பணவீக்கம் 70 சதவீதமாக உயர்வடையுமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டிருந்தது. இருப்பினும் அதற்கு மாறாக எதிர்பார்க்கப்பட்ட அளவை விடவும் பணவீக்கம் குறைவடைந்து, தற்போது தொடர்ந்து வீழ்ச்சியடைந்துவருவதன் காரணமாகக் கொள்கை வட்டிவீதங்களைப் பெருமளவாலன்றி, வெறுமனே 100 அடிப்படைப்புள்ளிகளால் மாத்திரம் அதிகரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் கொள்கை வட்டிவீதங்களுக்கும் சந்தை வட்டிவீதங்களுக்கும் இடையில் தொடர்ந்து இடைவெளியொன்று காணப்படுகின்றது. அதனையும் இந்தக்கொள்கை வட்டிவீத அதிகரிப்பின் ஊடாக சீரமைக்கமுடியுமென எதிர்பார்க்கின்றோம்.

அடுத்ததாக சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அனைத்து முன்நிபந்தனைகளையும் நாம் தற்போது பூர்த்திசெய்திருக்கின்றோம். எனவே அந்த உதவிக்கான சர்வதேச நாணய நிதிய இயக்குநர் சபையின் அனுமதி வெகுவிரைவில் கிடைக்கப்பெறும் என்று நம்புகின்றோம்.

மேலும் சுயாதீன மத்திய வங்கி இல்லாத நாட்டில் பணவீக்கம் தொடர்ச்சியாக அதிகரித்துச்செல்லும் என்பதை சிம்பாவே போன்ற பல்வேறு நிகழ்கால உதாரணங்களின் ஊடாகப் புரிந்துகொள்ளமுடியும். மத்திய வங்கியால் அனைவராலும் விரும்பத்தக்க தீர்மானங்களை மேற்கொள்ளமுடியாது. மாறாக விரும்பினாலும், விரும்பாவிடினும் சரியான தீர்மானங்களை மாத்திரமே மத்திய வங்கியால் மேற்கொள்ளமுடியும் என்று தெரிவித்தார்.

# ஆளுமையுள்ளோரை பயன்படுத்தாமல் விட்டமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தவறு!

## சிரேஷ்ட பேராசிரியர் ரவிராஜன் வருத்தம்

யாழ்ப்பாணம், மார்ச். 05

ஆளுமையுள்ள எம்மவர்களைப் பயன்படுத்தாமல் விட்டமை யாழ். பல்கலைக்கழகத்தின் தவறு என்பதை நான் உணர்கின்றேன் என யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் தெரிவித்தார்.

யாழ். ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் பழைய மாணவரும் அணு விஞ்ஞானியும் பேராசிரியரும் தொழிலதிபரும் சமூக சேவையாளரும் கனேடிய அரசியல் செயற்பாட்டாளருமான கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளையின் 'அணுவைத் துளைத்து' நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடின உழைப்பு எதையும் வெல்லும் என்பதைத்தான் கலாநிதி வேலுப்பிள்ளை இலகுப்பிள்ளையின் வாழ்க்கைச் சரித்திரமாக நான் பார்க்கிறேன்.

மிக வறிய விவசாய குடும்பத்தில் இவர் பிறந்து சாதித்திருக்கிறார். குறிப்பாக, எல்லா விதமான தொழில்களிலும் மிக உன்னதமான தொழில்களாக ஆசிரியர், மருத்துவர் என பல இருக்கின்றன. ஆனால், இவர்கள் எல்லோருக்கும் உணவளிப்பது விவசாயம் ஆகும். அத்தகைய விவசாயியின் மகனாக பிறந்து, எமது நாட்டில் விவசாயத்துக்கான வசதி, வாய்ப்புக்கள் இல்லாத நிலையிலும், வறுமையிலிருந்து விடுபட்டு உச்சத்தை தொட்டிருக்கிறார்.

இத்தகைய ஒரு சாதனையாளனின் சுயசரிதை நூலின் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு பெருமையடைகிறேன்.

நானும் இந்தத் துறையைச் சார்ந்தவன் என்ற வகையில் இதுவரை காலத்திலும் இத்தகையதொரு ஆளுமையை சந்திக்காதமை ஏமாற்றத்தைத் தருகிறது.

அது மட்டுமன்றி, இவ்வாறான ஆளுமைகளைப் பல்கலைக்கழகம் பயன்படுத்தாமல் விட்டுள்ளமை பெரும் தவறாகும். அதை எண்ணிக் கவலைகொள்கிறேன். இனியும் இவ்வாறான நிலை ஏற்படாதிருக்க வேண்டும்.

எங்கள் பிரதேசங்களில் உள்ள ஆளுமைகளை நாங்கள் அடையாளம் கண்டு, அவர்களிடமிருந்து பல்வேறு விடயங்களை எதிர்கால சந்ததிக்காக கற்றுக்கொடுக்க ஏற்பாடுசெய்ய வேண்டும்.

ஆளுமையாளர்களின் அனுபவங்களைப் பெற்றே எமது தற்போதைய ஆளுமையையும் எதிர்கால ஆளுமை திறனையும் பயனுள்ளதாக்கிக்கொள்ள முடியும்.

ஆசிரியரது வாக்கு மிகவும் சவாலானது. நான் படித்த இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் மகுட வாக்கியமான 'கடின உழைப்பு எதையும் வெல்லும்' என்பதை அணு விஞ்ஞானியினது வாழ்க்கைச் சரித்திரத்தின் ஒரு முடிவாக எடுத்துக்கொள்கிறேன்.

அணு விஞ்ஞானியின் வாழ்க்கை ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். அவர் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். அவரது அனுபவங்களை நாம் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். – என்றார்.



# விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு நிதி உதவி!

## தேர்ஸ்டன் கல்லூரி வழங்கியது

நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற பல வாகனங்கள் தொடர்புடைய கோர விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி நிதியுதவி வழங்கியுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தார், விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் சிறுமிக்கான கொடுப்பனவு உட்பட 17 லட்சம் ரூபா உதவித் தொகை, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கொலபொடவிடம் கல்லூரி அதிபரால் கையளிக்கப்பட்டது.

இந்த விபத்தின் போது, வானில் பயணித்தவர்களில் படுகாயமடைந்த சிறுமியொருவர் நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். அவரின் எதிர்கால நடவடிக்கைக்காக வங்கியில் 8 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

மாணவர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட கல்லூரி சமூகம் இணைந்தே இந்த நிதியை திரட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிதி வழங்கும் நிகழ்வில், கண்டி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், நுவரெலியா பொலிஸ் தலைமையகத்தின் பிரதானி, நானுஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஜனவரி 20 ஆம் திகதி கொழும்பு, தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்கள் சுற்றுலா வந்த பஸ், வான் மற்றும் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் வனில் பயணித்த ஆறு பேரும், ஓட்டோ சாரதியும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா உதவியது போன்று வேறு யாரும் உதவியதில்லை

## அலி சப்ரி பெருமிதக் கருத்து




இந்தியா வழங்கிய உதவியைப் போன்று ஏனைய அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்துகூட உதவிகளை வழங்கவில்லை என இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் இடம்பெறும் ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

390 கோடி அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள கடன் வரி எங்களுக்கு இன்னொரு தடவை போராட ஓர் உயிர்நாடியை வழங்கியதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் மீட்பு மற்றும் நிலைப்படுத்துதலின் மிகப்பெரிய பங்காளியாக இந்தியா உள்ளது எனவும் கூறினார்.



# மட்டக்களப்பு எம்பிக்கள் பிரி. தூதருடன் சந்திப்பு

திருகோணமலை, மார்ச் 05

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர்ஆணையர் சாரா ஹெல்ட்டனைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் இலங்கைக்குப் பொறுப்பான அதிகாரியான மாயா சிவஞானமும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

திருகோணமலையில் உள்ள தனியார் விடுதியொன்றில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் சமகால அரசியல் விடயங்கள், இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலமைகள், தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் இளைஞர்களின் பங்களிப்பின் மூலம் எவ்வாறு அரசியலை நகர்த்தலாம் என்ற விடயங்களும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்கள் எதிர்கொள்ளவுள்ள சவால்கள் தொடர்பாகவும் பிரித்தானியாவின் இலங்கைக்கான உயர் ஆணையரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தது.






காலைக்கதிர் Kalaikkathir























# வடமாகாண கல்வியை முன்கொண்டு செல்ல ஒரு தீர்க்கதரிசனத் தன்மை இருக்கவேண்டும்!

## சட்டத்தரணி செல்வஸ்கந்தன் கருத்து

வட மாகாணத்தின் கல்வியை முன்கொண்டு செல்வதற்கு ஒரு தீர்க்கதரிசனம் இருக்க வேண்டும். அதன் மூலம் தான் எங்கள் எதிர்கால சந்ததியை வட மாகாணத்தின் செல்வங்களாக உருவாக்க முடியும் என சட்டத்தரணி செல்வஸ்கந்தன் தெரிவித்தார்.

சட்டத்தரணியின் மறைந்த தாய் மற்றும் மனைவியான முறையே திருமதி எஸ்.இராஜரட்ணம், திருமதி. பத்மபாஷினி செல்வஸ்கந்தன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தனின் அனுசரணையுடன் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியால் கடந்த 2022 ஆம் ஆண்டு வட மாகாண ரீதியில் நடத்தப்பட்ட 'மகாஜனன்' புதிர்ப் போட்டிக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

மகாஜன கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த பரிசளிப்பு நிகழ்வினை கல்லூரியின் அதிபர் மணிசேகரன் தலைமையேற்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சட்டத்தரணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

வடக்கு மாகாண கல்வியில் ஒரு தீர்க்க தரிசனம் இருக்கவேண்டும். வடக்கு மாகாணத்தில் கல்வி தொடர்பில் தீர்க்க தரிசனம் இல்லை என்பது கவலையான விடயமாக உள்ளது.

கல்வியில் நாம் எவ்வாறு வட மாகாணத்தை முன்னேற்ற வேண்டும் என்றொரு தீர்க்க தரிசனம் எல்லோர் மத்தியிலும் உருவாகும்போதுதான் எங்கள் எதிர்கால சந்ததியை வட மாகாணத்தின் செல்வங்களாக உருவாக்க முடியும்.

வடக்கு மாகாணம் கல்வித்துறையில் மீண்டும் சிறந்த மாகாணமாக மாறவேண்டும். இதற்கு எல்லோரும் கல்விக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

1970 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலின்போது தேர்தல் பிரசாரத்துக்காக வருகை தந்த பிரதமர், வட மாகாணத்தில் இருந்து பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை குறைப்பேன் என்றார். ஆனால் ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் சென்ற வட மாகாணமாக மாணவர்களின் எண்ணிக்கை 45 வீதமாக இருந்தது.

அந்த நிலைமை மீண்டும் வரவேண்டும். அதற்காகத்தான் அதன் அத்திபாரமாக இந்த பரீட்சையை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

இத்தகைய பரீட்சையில் வட மாகாணத்தின் அனைத்து மாணவர்களும் பங்குபற்றுகின்ற வகையில் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுத்த வேண்டும் என வலிகாமம் பிரதி கல்விப் பணிப்பாளர் ஆதவன் தெரிவித்திருக்கிறார். இதற்கு நான் ஒத்துழைப்பு வழங்குகின்றேன்.

நான் மட்டுமன்றி, வட மாகாணத்தில் திறன்பட கல்வியில் உயர்ந்து வெளிநாடுகளில் திறம்பட உழைத்து வாழ்பவர்கள் பலர். அவர்கள் தமது சொத்துக்களின் ஒரு பகுதியை கல்வியின் வளர்ச்சிக்காக வட மாகாணத்துக்கு வழங்கவேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தனிப்பட்ட ரீதியில் உதவி செய்யாமல் எல்லோரும் இணைந்து ஒத்துழைப்பு வழங்குகின்றபோது அதன் பூரணமான ஒத்துழைப்பு கிடைத்து, வட மாகாணத்தின் கல்வியை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

இங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடம் நான் கூற விரும்புகின்றமை என்னவென்றால், உங்களது பிள்ளைகளை, மாணவர்களை விஞ்ஞானம் மற்றும் கணிதத்துறையில் ஊக்குவியுங்கள்.

மாணவனின் திறமையை அறிந்து வழிநடத்தக் கூடியவர்கள் பெற்றோர்களை விட ஆசிரியர்களே. மாணவர்களுக்கு பாசத்தையும் கல்வியையும் சேர்த்து அவர்களே ஊட்டுகின்றார்கள். இதன் மூலம் தான் மாணவர்கள் கல்வியில் முன்னேற முடியும். – என்றார்.












காலைக்கதிர் Kalaikkathir

# மகாஜனன் மாவட்டப் பரீட்சை தேசியளவில் நடக்கவேண்டும்

## பேராசிரியர் சண்முகலிங்கன் வலியுறுத்து

தரம் 9 முதல் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகள் வரை பிள்ளைகள் எந்தத் திசையில் போகவேண்டும் என்பதை தீர்மானிக்கக்கூடிய பரீட்சை என்ற வகையில் இந்த புதிர்ப் போட்டி தீர்க்கதரிசனம் மிக்க பரீட்சையாகும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

சட்டத்தரணியின் மறைந்த தாய் மற்றும் மனைவியான முறையே திருமதி. எஸ்.இராஜரட்ணம், திருமதி. பத்மபாஷினி செல்வஸ்கந்தன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தனின் அனுசரணையுடன் தெல்லிப்பழை மகாஜன கல்லூரியால் கடந்த 2022ஆம் ஆண்டு வட மாகாண ரீதியில் நடத்தப்பட்ட 'மகாஜனன்' புதிர்ப் போட்டிக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

மகாஜன கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்ற இந்த பரிசளிப்பு நிகழ்வை கல்லூரியின் அதிபர் ம.மணிசேகரன் தலைமையேற்றார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம் கல்வியில் பின்தங்கியுள்ளது என கூறி, பல விடயங்களை செய்யவேண்டும் அதற்கு நிதி தேவை என கூறி பலருடனும் பலவிதமாக பேசுகிறார்கள். ஆனால், செயற்பாட்டில் இல்லை. சட்டத்தரணி தனது முழுமையான நிதி பங்களிப்பில் மாவட்ட ரீதியாக மாணவர்களை முழுமையானவர்களாக உருவாக்குவதற்கு இந்தப் போட்டியை நடத்தி வருகிறார்.

நியமமாக நடத்தப்படுகின்ற பரீட்சைகளுக்கு அப்பால் பிள்ளைகளை தயார்ப்படுத்துவதற்கு இந்த 9 ஆம் ஆண்டு பரீட்சையில் பிள்ளைகள் பெறுகின்ற புள்ளிகளானவை, அந்தப் பிள்ளைகளை மதிப்பிடுவதோடு, பிள்ளைகளை 10 ஆம், 11 ஆம் தரங்களுக்கு தயார்ப்படுத்துவதற்கு ஒரு முன் ஆயத்தம் செய்யவும் வழிவகுக்கும்.

அதுமட்டுமன்றி, இந்தப் பரீட்சைகள் பிள்ளைகளுக்கானது மட்டுமல்ல, பிள்ளைகளுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்குமானது.பாடசாலைகளுக்கு இடையிலான பரீட்சையும் ஆகும்.

இந்த பரீட்சை முடிவுகள் தருகின்ற தரவுகளை வைத்துக்கொண்டு நாங்கள் விழிப்புணர்வுடன் எதிர்வரும் நாள்களைத் திட்டமிடுவோம்.

தரம் 9 முதல் க.பொ.த. சாதாரணதரம் மற்றும் உயர்தர பரீட்சைகள் வரை பிள்ளைகள் எந்தத் திசையில் போகவேண்டும் என்பதைத் தீர்மானிக்கக்கூடிய பரீட்சை என்ற வகையில் இந்த புதிர்ப் போட்டி தீர்க்கதரிசனம் மிக்க பரீட்சையாகும்.

சட்டத்தரணி செல்வஸ்கந்தன் தனியொரு மனிதனாக இதனை செய்யமுடியும் என்றால் இந்தக்கல்வியுலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒருமனதாக இணைந்து தேசிய ரீதியாக இந்தப் பரீட்சையை நடத்துமுடியும்.

கல்வியலாளர்கள் ஒருமித்த மனம் கொண்டவர்கள். இதில் இணைந்து மாணவர்களை முழுமையானவர்களாக உருவாக்க தங்களது ஒருமித்த ஒத்துழைப்பை வழங்கவேண்டும். – என்றார்.

மேலும், தரம் 9 மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற 'மகாஜனன்' கணித, விஞ்ஞான திறன்காண் போட்டிப் பரீட்சையில் முதலாம் இடத்துக்கு 40 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் இடத்துக்கு 20 ஆயிரம் ரூபாவும், அத்தோடு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இதேவேளை பல்கலைக்கழக புகுமுக பரீட் சையில் மூன்று பாடங்களிலும் அதி விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கும், மாவட்ட ரீதியில் முன் னணி வகிக்கும் மாணவர்களுக்கும் பணப்பரிசில்கள் வழங்கப்படுகிறது.

குறிப்பாக, பொறியியல் பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாவும், வர்த்தகத்துறை மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும், கலைத்துறை மாணவர்களுக்கு 20 ஆயிரம்ரூபாவும், தொழில்நுட்பத்துறை மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹரீஸ் எம்.பியின் கவலை



எமது கல்முனை மாநகர சபையில் இடம் பெற்றன எனக் கூறப்படுகின்ற நிதிமோசடி தொடர்பான விடயங்களை தவறாக பலர் பரப்பிவருகின்றார்கள் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் கவலை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழல் மற்றும் நிதி மோசடி தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கல்முனை மாநகர சபையில் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற நிதிமோசடி தொடர்பான விடயங்களைத் தவறாகப் பலர் பரப்பிவருகின்றார்கள். ஆனால், மாநகர சபையில் ஒரு நிதி கையாடல் இடம்பெற்றிருக்கின்றது. தற்போது வெளிவந்துள்ள நிதிமோசடி தொடர்பில் வங்குரோத்து அரசியல்வாதிகள் சிலர் எங்கள் மீது சேறு பூசுகின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினரானஎன் மீதும் சேறுபூசுகின்றார்கள். இம்மோசடி விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எவர்களாயினும் அவர்களைக் கண்டறிந்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசியுள்ளேன்.

இவ்வாறான களவு, மோசடிகளை மூடி மறைக்கதான் உள்ளிட்ட ஏனைய அரசியல் தலைவர்கள் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனத் தெரிவித்த அவர், இந்த மோசடி மூலம் கல்முனை மக்களின் நம்பிக்கையை சிதைத்தவர்களுக்கு எதிராக தயவு தாச்சனையின்றி கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தான் பொது மக்களிடம் உறுதிபடத் தெரிவிப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.




காலைக்கதிர் Kalaikkathir

# மருந்து இல்லையெனக் கூறினால் பொலிஸாரிடம் முறையிடுங்கள்

## இலங்கை வைத்திய சங்கம் அறிவுறுத்து

அரச வைத்தியசாலைகள் அல்லது அரச மருந்தகங்களுக்குச் செல்லும் நோயாளர்களுக்கு அங்கு மருந்து இல்லை எனத் தெரிவிக்கப்பட்டால், அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்குமாறு வலியுறுத்தியுள்ள இலங்கை வைத்திய சங்கம், அதற்கு சட்ட ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை வைத்திய சங்கத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெப்ரவரி 15 ஆம் திகதி நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது. இதற்கான பதிலைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவிக்கையில் –

சுகாதார அமைச்சின் அசமந்தப் போக்கின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது முறைப்பாட்டில் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார அமைச்சின் செயலாளரோ அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமோ விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை.

எனவே எந்தவொரு நோயாளியும் அரச வைத்திய சாலைகள் அல்லது மருந்தகங்களுக்கு சென்று அங்கு மருந்து இல்லை எனத் தெரிவிக்கப்பட்டால் அது தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். இது தொடர்பில் சட்ட ஒத்துழைப்பை வழங்குவதற்கும் நீதிமன்றத்தை நாடுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம். – என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம ,இது தொடர்பில் சுமார் ஓராண்டுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதியிடமும் கலந்துரையாடியிருந்தோம். அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமையின் காரணமாக இன்று இவ்வாறு பாரதூரமான மருந்து தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் மருத்துவ சேவை நிறுவனங்களில் தற்போது சுமார் 150 அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலைமை மேலும் பாரதூரமடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. – என்றார்.

# எஸ்.எல். எஸ். தரச்சான்று இன்றி ரின்மீன் விற்றால் சட்டம் பாயும்

## நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு தெரியப்படுத்த கோரிக்கை

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்களில் எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழ் பொறிக்கப்படாமல் சந்தையில் விற்பனை செய்யபடுமாயின் அது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்களில் எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் இல்லை என பல்வேறு சமூக ஊடகங்கள் மூலம் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்களில் தரநிலைச் சின்னம் இல்லாமை தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது தகவல்கள் இருப்பின் அதனை நுகர்வோர் அதிகார சபைக்கு அல்லது இலங்கை தர நிர்ணய நிறுவனத்துக்கு நேரடியாக அறிவிக்க முடியும்.

நாட்டில் பதிவு செய்யப்பட்ட ரின்மீன் உற்பத்தி நிறுவனங்கள் 12 காணப்படுவதுடன், குறித்த நிறுவனங்கள் 33 வகையான வர்த்தக நாமங்களில் உற்பத்திகளை விற்பனை செய்கின்றன. மேலும் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள ரின் மீன் வர்த்தகநாமங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்கள் தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு இலங்கை தர நிர்ணய நிறுவனம் தொடர்ந்து அறிவிக்கும்.

இதற்கு மேலதிகமாக இறக்குமதி செய்யப்படும் ரின் மீன் உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் அவை உற்பத்தி செய்யும் நாடு குறியீடுகள், குறிப்பிடப்பட்டுள்ளதால் இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களை எளிதில் அடையாளம் காண முடியும்.

இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்களுக்கு தரச் சான்றிதழ் கட்டாயமில்லை என்றாலும் இறக்குமதி செய்யப்படும் ரின் மீன்கள் சுங்க அனுமதிக்கு முன்னர் முறையான தரத்தின் கீழ் உள்ளனவா என்பது தொடர்பில் தரநிலைகள் நிறுவகத்தால் ஆய்வுகூட பரிசோதனைக்கு அனுப்பப்படும் என்றும் அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

NIPPON PAINT
THE COATINGS EXPERT

ATOM 2-in-1

Asia Pacific No.1

3 வருட உத்தரவாதத்துடன்

# சிறந்த சேமிப்புடன்

## வெளியே உள்ளே

## 2-in-1

# சிறந்த பெயின்ட்




**NIPPON PAINT ATOM 2-IN-1**

இது உட்புற மற்றும் வெளிப்புற மேற்பரப்புகளுக்கு ஏற்றதாக அமைகிறது. விரிவான R&D Ig பின்பற்றி, எங்கள் அலங்காரப் பங்காளர்களின் உள்ளீடுகளைக் கேட்டு, மாற்றியமைக்கப்பட்ட Acrylic emulsion அடிப்படையிலான அதிகபட்ச செயல்திறனுக்காக இந்த டைனமிக் பெயின்ட் உருவாக்கப்பட்டுள்ளது.

- தீங்கு விளைவிக்கும் மாசு வாயுக்களை வெளியிடுவதில்லை
- உட்புற மற்றும் வெளிப்புற சுவர்கள் இரண்டிற்கும் பயன்படுத்தலாம்
- குறைந்த ஆவியாகும் கரிம கலவைகள் அடங்கியது.
- கழுவக்கூடியது/துடைக்கக்கூடியது
- மேற்பரப்பை சுத்தம் செய்வதை எளிதாக்குகிறது
- அதிகபட்ச செயல்திறன்
- சுற்று சூழலுக்கு நேயமானது
- சுவர்களை சுத்தம் செய்தல் இலகுவானது




www. nipponpaint.lk

ISO 14001 : 2015 ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM CERTIFIED PLANT

GreenLabel SINGAPORE Environmentally Friendly Paint

**NIPPON PAINT LANKA (PVT) LTD**
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk
A product of ISO 9001 : 2015 certified company

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.03.2023இல் வெளியிடப்பெற்றது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 05th of March 2023

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

*Read the following passage and Answer: the question that follows.*

## Anna-The Cow

Anna is a cow. She lives in a farm with her family. She is a mother to a cute calf. Anna's husband is a big and strong bul Anna eats grass and gives milk. When she is not too busy sh spends her time with other animals on the farm. Her best friend are horses, sheep and goats.

1. Anna is a -------------------
Ans. --------------------------------------------------------
2. Anna is a mother to a cute
Ans. --------------------------------------------------------
3. Anna's husband is a big and, -------------------- bull.
Ans. --------------------------------------------------------
4. Anna eats --------------- and gives
Ans. --------------------------------------------------------
Q5. Her best friends are ---------------- sheep and goats.
Ans. --------------------------------------------------------





## An Artist

Drake loves to paint pictures. He went to the mall and he got a set of new paints. The next day he painted many pictures. With the pink paint he painted a brain. With the blue paint he painted a sea. With the yellow paint he painted a sun. With the brown paint he painted a tree. With the red paint he painted an apple. He loved his new paints.

1. Drake loves to ------------------------- pictures.
Ans. --------------------------------------------------------
2. He got a new ----------------------- of paints.
Ans. --------------------------------------------------------
3. With --------------- paint he painted a brain.
Ans. --------------------------------------------------------
4. What did he paint with blue paint?
Ans. --------------------------------------------------------
5. He painted an apple with the -------- paint.
Ans. --------------------------------------------------------

## Phone Bell

The phone was ringing for quite long when finally Lucy got up and answered it. It was her grandma who was living in Canada. Lucy talked with her for an hour. She missed her grandma a lot. Then, Lucy went outside to play with her cousin, Isabel who lived next door. The two girls played for a while then Lucy went inside to do her homework.



1. The phone was, ------------for quite long.
Ans. -------------------------------
2. It was Grandma who was living in,
Ans. -------------------------------
3. Lucy talked to her for an -----------
Ans. -------------------------------
4. Lucy played with her?
Ans. -------------------------------
5. ------------ lived next door.
Ans. -------------------------------

## Amazing Baker

The baker is Kate. Kate loves to bake. She will bake a cake. She loves to have a colorful cake. She will add 5 colors to her cake.



1. Who is the baker
Ans. --------------------
2. Kate loves to ----------
Ans. --------------------
3. What will she bake?
Ans. -------------------
4. She loves to have a ----- cake.
Ans. -------------------
5. She will add ---------- colors to her cake.
Ans. -------------------

"konwledge isn't free. You have to pay attention"

**Read the following passage and Answer: the question that follows.**



# Millie's Hair Style

Millie had a unique hair style. Everywhere she went, people stopped and looked at her. Millie had long pink hair that was covered in tiny spiders! It was the most bizarre hair style in the world. The spiders had been living on top of her head for years. Their parents, grandparents and great grandparents had lived in her hair. Millie was proud of her hair style and changed the way she had her hair every day. Some days she had the spiders dangling from the ends of her hair, and other days she sat the spiders on top of her bun. It was unique!

1. What does unique mean?

--------------------------------------------------------------------------

2. What do you think other people thought of Millie's hair?

--------------------------------------------------------------------------

3. How long had the spiders been living in her hair?

--------------------------------------------------------------------------

4. How did Millie feel about her own hair style?

--------------------------------------------------------------------------

5. What do you think about Millie's hair style?

--------------------------------------------------------------------------



# Activity in Yard

James was outside in the yard with his family. It was a beautiful fall day and the sun was shining. The leaves had fallen from the tree and they were all over the ground. James decided to clean the yard. He took out a rake. He had a lot of fun raking with his father.

I. James was outside in the -------------------------
with his family.
Ans. -------------------------------------------------------------
2. It was a beautiful day and the sun was ---------------------
Ans. -------------------------------------------------------------
3. The leaves had ------------------------- from the tree.
4. James decided to. -------------------------
Ans. -------------------------------------------------------------
5. He had a lot of fun -------------------------- the yard.
Ans. -------------------------------------------------------------

# Bike Rider

John went for a bike ride. He rode around the block. Then he met some girls he knew from school. They all rode to the field to play. They played tag. John ran so fast to catch the girls. John had a great time playing games with his friends.

1. John went for a, --------------- ride.
Ans. ------------------------------------------------------------
2. John met some -------------------------he knew.
Ans. ------------------------------------------------------------
3. They all rode to the ----------------------to play.
Ans. ------------------------------------------------------------

4. They played the game ------------------
Ans. ------------------------------------------------------------
5. John ran so fast to, ------------------------the girls.
Ans. ------------------------------------------------------------



# Beautiful Jelly Fish



Jellyfish are found in all oceans. Jellyfish look like umbrellas. Jellyfish can be large and brightly colored and. A group of jellyfish is called a 'bloom'. Jellyfish don't have brains. Some sea turtles eat jellyfish.

1. Where are jellyfish found? ------------------------
Ans. ------------------------------------------------------------
2. Jellyfish look like
Ans. ------------------------------------------------------------
3. They can be large and --------------- colored.
Ans. ------------------------------------------------------------
4. A group of jellyfish is called a -------------------
Ans. ------------------------------------------------------------
Q5. Sea Ans. --------------------------------eat jellyfish.
Ans. ------------------------------------------------------------

# 7 Reasons Why Marketing Strategy is Important for Your Business




I get it. Marketing can be overwhelming. From print ads and commercials to voice search and chatbots, there are a million different channels and activities that you could do to market your business. In fact, I often hear from clients and friends that they know they should be doing marketing, but they don't know where to start. My reply is always the same: I recommend starting with a marketing strategy.

Marketing strategy is important for your business. So important, in fact, that businesses that have a documented marketing strategy are 538% more likely to report success than businesses that don't have a documented strategy. Your marketing strategy is Step 0—it's the first thing you should do before you allocate funds or invest time in marketing activities. It's your guide to who you target, how you talk about your business, and how you differentiate yourself from all other businesses in your industry. It is the strategic foundation of your marketing house.

So, why should you have a marketing strategy? I have seven reasons why.

Marketing Strategy is Important for Your Business Because

**1. You Know Who Your Customers Are**

We can't be all things to all people. From a marketing and sales perspective, there has to be a certain type of person or business that is the most likely to become a long-term customer. When you have someone specific in mind, you can take their fears, wants, needs, and desires and show them how your product or service will alleviate their fears, meet their needs, and solve their problems. Marketing strategy defines your target customer/market so that you know exactly who needs your business.

**2. You Know What Your Business is and Why It Benefits Others**

A major component of marketing strategy is determining who benefits from your product/service, how they benefit, and reasons to believe that benefit. Your business is better than your competitors' businesses in some way and it uniquely benefits the people you serve. Defining these items strengthens your reason for being in business and enables you to stand out among a sea of competitors.

**3. You Communicate Your Value In a Consistent Way**

Marketing strategy is important because it defines how you communicate your value to others. You can give your marketing strategy document to anyone: colleagues, marketing agencies, contractors, salespeople, etc. and they will know exactly who you are, what you do, and why you do it. This gives you a consistent face in the marketplace and the confidence that your business will be accurately represented in all areas of sales and marketing.

**4. You Have a Guide for Your Marketing Plan and Budget**

A marketing plan is how you promote your business throughout the year, and your marketing strategy informs your marketing plan. Your strategy defines what marketing channels you'll use (print, social media, commercials, digital ads, direct mail, etc.) and your plan defines what activities you will do throughout the year within each channel and the timeline for doing those activities. Your marketing strategy ensures that the way you promote your company aligns with your overall goals, and it enables you to achieve the greatest value from your marketing.

**5. You Know What Success Looks Like**

Paraphrasing Peter Drucker, you can't manage what you don't measure. Marketing strategy will help you define what success looks like for your company and how you can measure that success. The goals you set within your marketing strategy will inform the metrics you use to measure the success of the marketing activities in your marketing plan. You'll know which activities were successful for you and which need tweaking for the future.

**6. You Know How You Stack Up Against the Competition**

When you have a marketing strategy in place, you know exactly what you do, who you benefit, how you go to market, and how you can measure success. You also know your competitive landscape and how you can best compete against similar businesses. It gives you a leg-up in your industry, especially if your competitors haven't documented their marketing strategy. You have a clear vision of who your company is, its strengths, its weaknesses, and everything in between. You know where you win and how to promote your company to win.

**7. You Exude Professionalism**

When you have a clear understanding of who you are and know exactly how to talk about your business, you exude confidence and professionalism. When you are certain about who your customer is and how you will benefit that customer, you are able to focus your time, energy, and money reaching that customer. Your business will seem more professional because it is more professional with a marketing strategy in place.

With marketing strategy, every activity you do, every action you take leads towards helping your customers solve their problems. Marketing strategy builds brand loyalty and customers for life while giving you a clear path to follow and a concise way of explaining your value to others.

Interested in learning more about marketing strategy? Contact Starza Thompson today to schedule a free 30 minute consultation.

Content provided by Women Belong member Starza Thompson

# சந்தைப்படுத்தல் துறையில் வேலை தேடுபவரா நீங்கள்?

## குறித்த துறையில் ஒரு வருட கால அனுபவமிருந்தால் விண்ணப்பிக்கலாம்

ஹேலிஸ் குழுமத்தைச் சேர்ந்த சோலார் பேனல்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு

# *விற்பனைப் பிரதிநிதிகள்*

இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

**சிறந்த சலுகைகளுடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**

***உங்கள் விண்ணப்பத்தை இன்றே Whatsapp செய்யுங்கள்***

# 077 266 4320

careers@heyleysfentosns.com

**நேர்முகப் பரீட்சை 4 ஆம் திகதி மார்ச் மாதம் யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் உள்ள Hayleys Showroom இல் நடைபெறும்**

# 071 01 61 411

s.ratheeshwaran@hayleyssolar.com


intel AMD
hp Lenovo DELL
Hi-Res AUDIO
NVIDIA GEFORCE
NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North
LAPTOPS
Special OFFER
i3, i5, i7 12th GEN
Hp - Dell - Lenovo
2 OR 3 YEARS WARRANTY
Free Bag, Antivirus, 64GB Pen Drive, Mouse
Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk
JAFFNA 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. 077 766 7975 / 021 222 1121
KILINOCHCHI No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. 076 359 7610 / 021 228 5550
MANNAR No.208A, Hospital Road, Mannar. 076 359 4368 / 023 222 2500
NALIN IT EXCLUSIVE No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) 076 359 4359 / 021 221 0404
SERVICE CENTER 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. 077 766 7975 / 021 222 1121
HP WORLD 195/3, Parameswara Junction, Palaly Road, Jaffna. 076 359 4363 / 021 222 4994


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 20 சனிக்கிழமை 04.03.2023 கதிர் 367

## பீரிஸை நீக்க 'மொட்டு' முடிவு



நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை தமது கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது.

நிறைவேற்றுக்குழு கடந்த வாரம் கூடியபோதே 2

# நீதிமன்ற உத்தரவுக்கு அரசு தலைசாய்க்கும்



## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

**உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மறிப்பதற்குத் தடை விதித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை இந்த ஆட்சி மதித்து நடக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.**

**கித்துல்கல பிரதேசத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.**

**"நீதிமன்றத்தின் முடிவை இந்த ஆட்சி மதிக்கும். நீதிமன்றம் சொல்லியிருப்பதற்கு ஏற்ப பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார் அவர்.** 2

## ஏமாற்றாது தேர்தல் திகதியை விரைவில் அறிவிக்க வேண்டும்

### செல்வம் எம்பி கோரிக்கை

அரசும், தேர்தல்திணைக்களமும் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றாது, தேர்தல் எப்போது என்பதை உறுதியாக அறிவிக்கவேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள தனது கட்சியின் அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலுக்கான நிதியை மறிக்கக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுவிட்டது. அதனால் தேர்தலுக்கு இதுவரை இருந்து வந்த தடை அகன்றதுபோன்றே தெரிகின்றது. ஆனால் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது 2

## வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ்த் தேசமாகப் பிரகடனம்

### முஸ்லிம் தலைமையிலான நாம் மனிதர்கள் கட்சி அதிரடி

(த. தர்மேந்திரா)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைதமிழ்தேசம்என்று முஸ்லிம் ஒருவரைத் தலைவரா கக் கொண்ட நாம் மனிதர்கள் கட்சி வெள்ளிக்கிழமை பிரகட னம் செய்துள்ளது.

வடக்குகிழக்குமாகாணங்களில் வாழ்கின்ற மூவின மக்களையும் அரவணைத்து நடக்கின்ற மிகப் பொருத்தமான தலைவர் ஒருவர் இந்தத் தமிழ்த் தேசத்தின் தந்தையாக ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அந்தக் கட்சி முன்மொழிந்துள்ளது.

காத்தான்குடியை தலைமையகமாக கொண்டு நாம் மனிதர்கள் கட்சி தோற்றம் பெற்றுள்ளது. நீண்ட தசாப்த கால அரசியல், சமூக, பொதுநல ஊடக செயற்பாட்டாளர் ஹாரிஸ் அலி உதுமா லெப்பை இதன் உருவாக்குநரும், பொதுச் செயலாளரும் ஆவார்.

இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம் ஒருவரைத் தலைமைப்பொறுப்பில்கொண்டிருக்கக்கூடிய அரசியல் கட்சி ஒன்றுதமிழ்த்தேசப்பிரகடனம் செய்திருக்கின்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவே ஆகும் என்று அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் அவதானிகளால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிரகடனம் தொடர்பாக ஹாரிஸ்அலிஉதுமாலெப்பை காலைக் கதிர் பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

தமிழ் தேசத்தில் தமிழர்கள், சோனகர்கள், சிங்களவர்கள் என மூவின மக்கள் வாழ்கின்றனர். ஆனால் பொதுவாக 2

## ஆறு பேருக்கு ஒருவர் மட்டக்களப்பில் புற்றுநோயால் பாதிக்கப்படும் அபயாம்

### வைத்திய நிபுணர் கருணாகரன் எச்சரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பேருக்கு ஒருவர் புற்றுநோயினால் பாதிக்கப்படும் நிலைமை காணப்படுவதாக இலங்கை புற்றுநோய் சங்கத்தின் 2

## மலையக சிறாரை வேலைக்கு அமர்த்தினால் நடவடிக்கை



சிறார்கள் மத்தியில் போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பது சம்பந்தமாகவும், பெருந்தோட்ட சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நுவரெலியா மாவட்ட 2

## கச்சதீவிலும் களவு

(ந.லோகதயாளன்)

கச்சதீவு, மார்ச் 4

கச்சதீவு உற்சவத்திலும் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இரண்டு நாள் உற்சவமாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து கச்சதீவுக்கு சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை கொடியேற்றத்துடன் உற்சவம் தொடங்கியது.

இன்று காலை திருப்பலியுடன் உற்சவம் முடிவுக்கு வந்தது. இடையில் நள்ளிரவு முதல் அதிகாலை வரையில் சில மணி நேரம் பக்தர்கள் தூங்கினர்.

அந்த நேரத்திற்குள் பக்தர்களிடம் இருந்து பணம், நகை என்பன களவாடப்பட்டுள்ளன. ஒருவரிடமிருந்து 11 பவுண் தாலிக்கொடி அறுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இது தவிரவும் பல நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ளன என்றும் முறையிடப்பட்டுள்ளது.

கச்சதீவு ஒரு சிறு தீவு என்றாலும், அங்கிருந்து கடற்படையினரின் கண்காணிப்பின்றி எவரும் தப்பிச் சென்றுவிட முடியாது என்றபோதும் பக்தர்கள் அனைவரையும் சோதனையிட்டு வெளியேற அனுமதிப்பதாயின் நீண்ட நேரம் ஆகும் என்பதால் திருடப்பட்ட பொருட்கள் எவையும் சோதனை செய்து கண்டுபிடிக்கப்படவில்லை.

## கிளிநொச்சியில் மாடுகளுக்கு இலம்பி நோய் தாக்கம் அதிகரிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு பெரியம்மை என்று சொல்லப்படுகின்ற இலம்பி நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, இயக்கச்சி, பளை, உருத்திரபுரம் போன்ற பகுதிகளில் இந்த நோயின் தாக்கம் அதிகளவில் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பூநகரி பகுதியில் இந்த நோய் இப்போது வெகு வேகமாகப் பரவி வருகின்றது என்று கால்நடை வளர்ப்பாளர்கள் காலைக்கதிர் பத்திரிகையின் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

நோய்த்தாக்கம் காரணமாக உங்கள் பகுதிகளில் ஏதேனும் நோய்களுக்கான அறிகுறிகள் தென்படுமாயில் அருகில் உள்ள கால்நடை வைத்தியர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளமுடியும் மாகாண கால்நடைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## நாளை வருகிறது நிலக்கரிக் கப்பல்



மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரைதடையின்றி இலங்கைக்குக் கொண்டு வரப்படும் என்று இலங்கை நிலக்கரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்கள் ஊடாகவும் நிலக்கரித் தொகை இலங்கைக்கு கிடைத்துள்ளதாக அதன் பொது முகாமையாளர் 2

## கச்சதீவுப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏதுமில்லை

(கச்சதீவில் இருந்து ந.லோகதயாளன்)

இலங்கை இந்திய மீனவர்களிடையே நீண்டகாலமாக இடம்பெற்று வரும் இழுவை மடி படகுகளின் பிரச்சினை தொடர்பாக கச்சதீவில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுக்களில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. தீர்வுக்கான இணக்கங்கள் ஏதும் காணப்படவில்லை. இரு தரப்பினரும் தத்தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்ததுடன் பேச்சு முடிவடைந்தது.

கச்சதீவு அந்தோனியார் உற்சவம் மாலை தொடங்கியது. அதற்கு முன்பாக மூன்று மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இலங்கை – இந்திய மீனவர்களுக்கு இடையே பேச்சு இடம்பெற்றது.

அமைச்சர் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த மீனவர் பிரதிநிகள், கட்சிகளின் மீன்வளத்துறைப் பொறுப்பாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் தொடங்கியது.

இழுவைமடி தவிர்ந்த ஏனையை இந்திய கடற்கலங்களை இந்திய எல்லைக்குள் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்று இந்தியத் தரப்பில் முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

இலங்கைக் கடற் படையினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ள தமது மீன்பிடிப் படகுகளை விடுவிக்க வேண்டும் என்றும் கைது செய்யப்படும் மீனவர்கள் கூலிக்காக அந்தப் படகுகளில் வருபவர்கள், அவர்களை மனிதாபிமான ரீதியில் அவர்களை விடுவிக்கவேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

இலங்கைக் 2

## 16 கி.கி "குஷ்" மாட்டியது 4 வெளிநாட்டினர் கைது

16 கிலோ கிராம் குஷ் ரக போதைப்பொருளுடன் 4 வெளிநாட்டினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி – அபராதுவ – ஹிட்டியன்கல பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள், 21 முதல் 46 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் காலி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.



## கச்சதீவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்க ளுக்கு அனுமதி வழங்க முடி யாது என்று இலங்கை மீன வர்கள் அடியோடு மறுத்தனர்.

இது தொடர்பில் 20 வருடங்களாகத் தொடர்ந்து பேசி வந்தாலும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை என்று விசனம் தெரிவித்தனர். எங்கள் வாழ்வாதாரப் பிரச் சினையையும் நிலமைகளை யும் புரிந்துகொள்ளுங்கள் என்று மன்றாடினர். இந்தியப் படகுகளால் இலங்கை மீனவர்களின் சொத்துக்கள் பல கோடிரூபாய் அளவில் சேதமாக்கப்பட்டுள்ளன என்பதை விலாவரியாக எடுத்து விளக்கி னர்.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு கிழமைக்குள் தீர்வு வழங்கபடாவிட்டால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தையும் இந்தியத் துணைத் தூதரகத்தையும் முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வோம் என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இரு தரப்பினரதும் கருத்துப் பரிமாற்றங்களைத் தொடர்ந்து பேசிய அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, இங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் கலந்து ரையாடிவிட்டு முடிவுகள் குறித்துத் தெரிவிப்பார் என்று கூறினார்.

இந்தப் பேச்சில் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வள திணைக்கள உதவி பணிப்பாளர்கள், வடமாகாண கடற்படை தளபதி அனுர தென்னகோன், பா.ஜ.க. தமிழ்நாடு மீனவ தலைவர் எம்.சி முனுசாமி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பேச்சுக்களைத் தொடர்ந்து கச்சைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் மாலை நான்கு மணியளவில் கொடியேற்றலு டன் தொடங்கியது.

நீண்டகாலத்தின் பின்னர் பெருமளவான இலங்கை இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் வருடாந்த உற்சவத்திற் கான கொடியேற்ற வைபவம் சிறப்பாக இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதை நிகழ்வு இடம்பெற்றது. இன்று காலை 7 மணியளவில் யாழ். மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிர காசம் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் உற்சவம் முடிவுக்கு வரும்.

இம்முறை வருடாந்த கச்சைதீவு உற்சவத்திற்கு இலங்கை கடற்படை, இந்திய துணைத் தூதவராலயம், இலங்கையின வெளி விவகார ஆமைச்சு ஆகியன முழுமையான பங்களிப்பை வழங்கின..

இந்தியாவில் இருந்து 2100 பக்தர்களும் இலங்கையிலிருந்து கடற்படையினரின் படகுகள் மூலமும் ஏனைய தனியார் படகுகள் மூலமும் 2800 பக்தர்களும் கச்சதீவுக்கு வந்திருந்தனர்.

## வடக்கு கிழக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காவில் விசேடமாக தமிழ்த் தேசத்தில் மூவின மக்களும் துருவமயப்படுத்தப்பட்டு உள்ளனர்.

மூவின மக்களையும் அரவணைத்து நடக்கக்கூடிய கனவான் தலைவர் ஒருவர் தமிழ்த் தேச தந்தையாக ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும். அவர் தமிழ் பேசும் மக்களே என்று தமிழ் பேசும் மக்கள் கூட்டத்தை விளித்து பேசுபவராக இருக்கவேண்டும்

தமிழ் பேசும் மக்களுக்கான விசேட தீர்வை முன்வைக்க கூடியவராக இருத்தல் வேண்டும். மக்களை கண்டு மிரண்டு ஓடுபவராக இருக்கக் கூடாது. மக்களைச் சந்திக்க மறுப்பவராக இருக்கக்கூடாது. மக்களைச் சந்தித்து, குறைகளைக் கேட்டு தீர்வு வழங்குவதில் அலாதி பிரியம் உள்ளவராக இருக்கவேண்டும்.

மூவின மக்களும் அணுக கூடியவாரக இருக்க வேண்டும். தமிழ் தேச மக்கள் மாத்திரம் அன்றி தமிழ் தேசத்தின் உதிரி தலைவர்களும் மிக பொருத்தமான தலைவரை தமிழ் தேச தந்தையாக அடையாளம் கண்டு, ஏற்று, அங்கிகரித்து அரசியல் விடுதலை பெற தயாராக வேண்டும். இதற்கான வழிகாட்டல், அறிவூட்டல், தெளிவூட்டல் ஆகியவற்றை நாம் மனிதர்கள் கட்சி முன்னின்று மேற்கொள்ளும் – என்றார்.

## பீரிஸை நீக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். இதன்படி புதிய தவிசாளர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன எனவும், அவர்களில் ஒருவர் விரைவில் தெரிவுசெய்யப்படுவார் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஏனைய கட்சிகளில் இணைந்து கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்களையும் கட்சியில் இதுவரை வகித்த சகல பதவிகளில் இருந்தும் நீக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியியிடும் ஏனைய கட்சிகளில் இருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களை நீக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அண்மையில் தீர்மானித்துள்ளது.

## மலையக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடும் நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை எடுக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

சிறார்களை இலக்கு வைத்து சந்தையில் ஒரு வகையான பாக்கு இருப்பதாகவும், அது போதைப்பொருளாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், சிறார்கள் போதைப்பொருள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கக் கூடியது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இதனைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் போதைப் பொருள் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை இதுவரை 43 பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி இராமேஷ்வரன், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# பாடசாலைக்கு மிக அருகில் மது விற்பனைக்கு எதிர்ப்பு

## திருகோணமலையில் வெள்ளியன்று ஆர்ப்பாட்டம்

திருகோணமலை கடல் முக வீதியில் உள்ள பிரபல பெரும்பான்மையின கலவன் பாடசாலைக்கு முன்பாக புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விடுதி ஒன்றில் மதுபானம் விற் பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெள்ளிக்கிழமை மதியம் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை பழைய மாண வர்கள் பாடசாலைச் சமூகத் தினர் ஒன்றிணைந்து பாட சாலைக்கு முன்பாக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த விடுதிக்கு 100 மீற்றர் தூரத்தினுள் ஆலயம் மற்றும் பாடசாலை அமைந்திருக்க எவ்வாறு மதுபானச்சாலை திறப்பதற்கு அரச அதிகாரிகள் அனுமதிக்க முடியும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேள்வி எழுப்பினர். மேற்படி விடுதியில் மதுபானம் விற்பனை செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வீதியை மறித்தும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த விடுதியில் உடனடியாக மதுபான விற்பனை நிறுத்தப்படாவிடின் தாம் தொடர்ச்சியானஉண்ணாவிர தப் போராட்டத்திலும் இறங்கப் போவதாகவும் அவர்கள் எச்சரித்தனர்.



## நாளை வருகிறது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாமல் ஹெவகே குறிப்பிட்டார். இதேவேளை, நிலக்கரி ஏற்றி வரும் 16 ஆவது கப்பல் நாளை நாட்டை வந்தடையவுள்ளதாகவும் நாமல் ஹெவகே மேலும் கூறினார்.

## ஏமாற்றாது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாமல் உள்ளது அவர் கூறினார்.

தேர்தல் திணைக்களம் தேர்தலை வைப்பதாயின் உடனடியாகத் தனது நிலைப்பாட்டைச் சொல்லவேண்டும் அல்லது இறுதி முடிவை 9 ஆம் திகதியாவது அறிவிக்க வேண்டும். அதை விடுத்து இரு தரப்புகளும் மக்களை ஏமாற்றக்கூடாது – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிமன்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்கான நிதி விடுவிக்கப்படுவதை நிதி அமைச்சின் செயலாளரோ, திறைசேரிச் செயலாளரோ, சட்ட மா அதிபரோ அல்லது தொடர்புடைய அதிகாரிகள் யாருமோ மறிப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை உயர் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை பிறப்பித்தது.

2023 வரவு - செலவுத் திட்டத்தால் ஒதுக்கப்பட்ட எந்தவொரு நிதியும் நிறுத்தி வைப்படுவதை இந்த உத்தரவு தடுத்து நிறுத்துகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்க அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து இந்த இடைக்கால உத்தரவை மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு பிறப்பித்தது.

## ஆறு பேருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் வைத்திய நிபுணர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது. அதில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வருங்காலத்தில் இலங்கையில் ஏற்படும் இறப்புக்களில் முதல் இடத்தினை புற்றுநோய் கொண்டிருக்கும் நிலையேற்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் புற்றுநோய்க்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்வது பெரும் சவாலாக மாறியுள்ளது. விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் தொற்றுநோயின் தாக்கம் தொடர்பில் மக்களை விழிப்பூட்டவதன் மூலம்தான் நெருக்கடியைச் சற்றாவது குறைக்க முடியும் – என்று அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் தொடங்கிய இந்த ஊர்வலமானது மட்டக்களப்பு பிரதான பேருந்து நிலையம் வரையில் சென்றது. புற்றுநோய் தொடர்பான பல்வேறு பதாகைகளை ஊர்வலத்தில் சென்றவர்கள் ஏந்தியிருந்தனர். புற்றுநோயை கட்டுப்படுத்த, தவிர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகள் கொண்ட கையேடுகளும் விநியோகிக்கப்பட்டன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நல்ல அரசியல்வாதிகளுக்கான பஞ்சமே நாட்டிலுள்ள பிரச்சினை

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி செயலாளர் தெரிவிப்பு

(பழுவூரான்)

நல்ல அரசியல்வாதிகளுக்கான பஞ்சமே நாடும் தமிழ்பேசும் சமூகங்களும் முகம்கொடுக்கின்ற அத்தனை நெருக்கடிகளுக்கும் பிர ஊதான காரணமாகும். ஆகவே நாட்டிலும் சமூகத்திலும் அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும செயற்படக்கூடிய நேர்மையான, தூய்மையான அரசியல் செயற்பாட்டாளர்களை பயிற்றுவித்து அனுப்ப வேண்டியது காலத்தின் தேவை.



இவ்வாறு தெரிவித்தார் ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் செயலாளர் நாயகம் இரா. ஜீவன் இராசேந்திரன்.

தோழர் இரட்னசபாபதி அரசியல் கற்கைகள் நிலையம் தொடங்கவிழாவில் உரையாற்றும்போது– அவர் இத னைத் தெரிவித்தார். இந்தக் கற்கைகள் நிலையம் அட்டன் நகரில் தொடங்கப்பட்டுள்ளது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித் ததாவது:

ஈரோஸ் ஜனநாயக முன்னணி நுவரெலியா மாவட்டத்தில் இன்று தமிழ் மொழி மூலமாக ஆரம்பிக்கப்படும் நிலையத்தின் பணிகள் விரைவில் நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் படுவதோடு, சிங்கள மொழி மூலமான கற்பித்தல் முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

தமிழ் பேசும் சமூகங்கள் பிரதேசத்தாலும், மதத்தாலாலும் சிதறி பேரினவாத ஒடுக்கு முறையிலும், முதலாளித்துவ சுரண்டலிலும் அலலலுற்றவேளைமதத்தால்இந்துவானாலும் மாண்பில் முஸ் லிம் என்றாலும், வேதம் பயிலும் கிறிஸ்தவனும் தீரச்சைவனானாலும் ஈழத்தமிழர் ஈழவரே. எங்கிருந்தாலும் நம் மவரே என முழுக்கமிட்டு பாட்டாளி வர்கத்தின் தலைமையிலான போராட்டத்திற் கூடாக தமிழ்பேசும் மக்களுக்கு சமத்துவ, சமதர்ம ஆட்சியை நிலைநாட்ட முடியும் என கோசமெழுப்பி ஈரோஸ் என்ற பெயரில் வடக்கு, கிழக்கு, மலையகத்தை இணைத்துக் கொண்டு புரட்சிகர அமைப்பை கட்டியெழுப்பிய புரட்சிகர சிந்தனையாளரே எமது தோழர் இரட்னா என்ற இரட்னசாபாபதி ஆவார்.

மொழி வெறியாகவும், உயர் கல்வி பிரச்சினையாக வும் காட்டப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைவர்க்ககண்ணோட்டத்திலும், மார்க்சிய அனுகுமுறை ஊடாகவும், உடமைப்பாட்டு பிரச்சினையாக வெளிப்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அரசியல் களத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியவர் தோழர் இரட்ணா.

அவரின் பெயரில் தொடங்கப்படும் இந்த கற்கைகள் நிலையம் எதிர்காலத்தில் தூய்மையான அரசியல் செயற்பாட்டாளர் களை நாட்டுக்கும், தமிழ்பேசும் மக்களுக்கும் தருவிக்கும் பணியை சிறப்பாக செய்யும் என்றார். தொடக்க நிகழ்வில் விசேட அழைப்பாளராக அட்டன் நகர சபை உறுப்பினர் கேசவ மூர்த்திகலந்துகொண்டார். ஆசிரியர்கள், சமூக செயற்பாட் டாளர்கள் கட்சித் தோழர்கள் என வேறு பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். குடாநாட்டில் குருதிக்கு தட்டுப்பாடு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் குருதி வழங்கல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில், அந்த அதிகரிப்பிற்கு ஏற்ப குருதிக்கொடையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை எனவும் இதனால் இரத்த வங்கியில் அடிக்கடி இரத்தத்துக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

இதனால் நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்க முடியவில்லை என இரத்த வங்கி அறிவித்துள்ளது.

கடந்த 28 ஆம் திகதி 49 சேகரிப்பும் , 49 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. முதலாம் திகதி 17 சேகரிப்பும் 48 வழங்கலும் இடம்பெற்றுள்ளது. 2 ஆம் திகதி 33 சேகரிப்பும் 39 வழங்கலும் இடம்பெற்றுள்ளது.

குறித்த புள்ளிவிவரத்தின்படி சேகரிப்பை விட வழங்கல் கூடுதலாக காணப்படுகின்றது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே இரத்த தானம் செய்வதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

இரத்த தானம் செய்பவர்கள் மற்றும் இரத்த தான முகாம்களை ஒழுங்கமைப்பவர் கள் தமது 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

# 11 கிலோ கொழுந்து களவை நிறுத்துங்கள்

## கம்பனிகளிடம் இ.தொ.க. வலியுறுத்து

தொழிலாளர்களால் பறிக்கப்படும் தேயிலை கொழுந்தில் இருந்து ஒருதடவைக்கு 3 கிலோ கிராம் தோட்டக்கம்பனிகள் திட்டமிட்டு கழித்து வருகின்றன. இந்த சட்டவிரோத நடவடிக்கையை நிறுத்தாவிட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தோட்டத்தொழிலாளர்களுக்கு கடந்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்ட பிட்டனர், அவர்கள் நாள் ஒன்றுக்கு பறிக்கும்தேயிலைகொழுந்தில் இருந்து தோட்டக்கம்பனிகள் 11கிலோ கிராம் திட்டமிட்டு கழித்து வருகின்றன.

தொழிலாளர்கள் பறிக்கும் தேயிலைகொழுந்துநாள்ஒன்றுக்கு நிறுக்கப்படும் 3 தடவைகளில் தலா 3கிலோ கழிக்கப்படுவதுடன் தொழிற்சாலை கழிவு என 2 கிலோ கிராம் கழிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் மொத்தமாக நாள் ஒன்றுக்கு பறிக்கும் தேயிலைக் கொழுந்தில் இருந்து 11கிலோ கிராம் கழிக்கப்படுகிறது. இதனை ஒருபோதும்ஏற்றுக்கொள்ளமுடியாது. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கனபதி கனகராஜ், அளவீட்டு அலகுகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிலரை பொகவந்தலாவை தோட்டத்தில் தேயிலை கொழுந்து நிறுக்கும் இடத்துக்கு அழைத்துச்சென்ற போது, அங்கு இவ்வாறு இடம்பெறுவதை கையும் களவுமாகக் கண்டுபிடித்தனர். இவ்வாறான நடவடிக்கைபொதுவாகஅனைத்து தோட்டங்களிலும் இடம்பெறுகிறது. இதுதொடர்பாக தோட்ட சங்கத்துக்கு எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறோம்.

எனவே, இந்த நடவடிக்கையை தோட்டக்கம்பனி உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும். அத்துடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த நடவடிக்கைக்கு எதிராகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதுடன் வெளிநாடுகளிலும் இந்த கம்பனிகளுக்கு எதிராக எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுப்போம். இதன் மூலம் இவர்களின் தேயிலைஏற்றுமதிசெய்யமுடியாத நிலை ஏற்படும் என்ற எச்சரிக்கையை விடுக்கிறோம். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களும் பறிக்கும் தேயிலை கொழுந்தில் 3கிலோ குறைப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவ்வாறு ஏற்றுக்கொண்டால்காலப்போக்கில் இது மேலும் அதிகரிக்கும். கம்பனிகளின் இந்த நடவடிக்கைக்கு எதி ராக நாங் கள் நடவடிக்கை எடுப்போம். – என்றார்.

# நாணய நிதியக் கடன் உதவி கிடைத்தால் விலை குறையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி இலங்கைக்குக்கிடைத்தவுடன் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளின் விலைகளைக் குறைக்க முடியும் என்று தெரிவித்தார் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி தற்போது உயர்வடைந்துள்ளது. நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி முன்னெடுத்த ஒரு சில கடுமையான தீர்மானங்களினால் இந்த முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது. ரூபாவின் பெறுமதியை நிலையான தன்மையில் பேணும் பட்சத்தில் நிதி நிலைமையை உறுதிப்படுத்த முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இம்மாத இறுதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும். அது கிடைத்தவுடன் அத்தியாவசியப்பொருட்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்களை குறைக்க முடியும் என்று கருத்துகின்றோம்.

நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சுக்கள் சாதகமாக உள்ளன.

இந்தியா,சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை முழுமையாக வரவேற்கிறோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றவுடன் நாட்டின் கடன் நிலை நிலைபேறான தன்மையில் பேணப்படும் – என்றார்.

# சில அடிப்படைத் தீர்மானங்களை எடுக்க நாடாளுமன்றம் தவறியது

## கரு ஜெயசூரிய சாடல்



மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தெரிவுக்குழு தீர்மானித்த போதிலும், எடுக்க வேண்டிய சில அடிப்படைத் தீர்மானங்களை நாடாளுமன்றம் எடுக்கத் தவறியுள்ளதாக, சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில்அராஜகத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு நடவடிக்கைக்கும் பங்களிக்காமல் இருக்கின்றமை அனைவரின் முழுமையான பொறுப்பு என சமூக நீதிக்கான தேசிய இயக்க தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

குறிப்பாக 2022-2024 காலப்பகுதியில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தநான்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய கரு ஜெயசூரிய, இது போன்ற பல பொறுப்புகள் நாடாளுமன்றத்தால் புறக்கணிக்கப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

இவ்வாறான நிலையிலும்கூட, இந்தசவால்களை வெற்றிகொள்வதற்கு நாடாளுமன்றத் தின் ஊடாகவே தீர்வுகளைக் காணவேண்டிய அவசியம் உள்ளது எனவும் தெரிவித் தார்.

இதன்படி, தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றத்தைப் புறக்கணிப்பதன்மூலமோ அல்லதுநாட்டைமுடக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமோ எந்தவொரு தீர்வையும் காண முடியாது எனவும் அனைத்துசவால்களையும் ஜனநாயக ரீதியாகவும் அமைதியாகவும் வெல்ல வேண்டும்எனவும்கூறினார்.

# குளங்களை புனரமைக்க 30 கோடி ரூபா ஒதுக்கீடு!



பல தசாப்தங்களாக புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்ட 30 குளங்களை இந்த வருடத்துக்குள் புனரமைக்க விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாந்தோட்டை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், மட் டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அநுராதபுரம், குருநாகல், புத்தளம், பதுளை, மொனராகலை ஆகியமாவட்டங்களில்இருந்து தெரிவு செய்யப்பட்ட 30 கைவிடப்பட்ட குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தக் குளங்களின் கீழ் நெல் பயிரிடுவதற்குப் பதிலாக மரக்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடுவதற்கு முன்னுரிமை வழங்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, விவசாய அபிவிருத்தி திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# நுவரெலியா வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், சிற்றூளியர்கள் என பலரும் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வைத்தியசாலை பிரதான நுழைவாயில் முன்பாக இன்று (சனிக்கிழமை) கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில்ஈடுபட்டவர்கள் அத்தியாவசிய மருந்துகள் மற்றும்மருத்துவஉபகரணங்கள் உடனடியாகமக்களுக்குகிடைக்க வழி செய்ய வேண்டும், முறையற்றநியமனத்தைவழங்குவதை நிறுத்து, வாழ்வாதாரத்தை அதிகரிக்கவும், வங்கியில் அதிகரித்தவட்டிவீதத்தைகுறைக்கவும், ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய், வான் உயரத்தில் பண வீக்கம் நடு வீதியில் உத்தியோகஸ்தர்கள் போன்ற பல்வேறு வாசகங்களைத் தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறும், கோங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இந்தப் போராட்டத்தை அனைத்து சேவைகளையும் இடைநிறுத்தி பாரியளவில் முன்னெடுக்கப்போவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இந்தப்போராட்டம் காரணமாக சுமார் ஒரு மணித்தியாலம் வைத்தியசாலை பணிகள்பாதிக்கப்பட்டுள்ளதுடன், நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர்தர பரீட்சை கடமையில் ஈடுபடுவோருக்கு ரூ. 2000

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடமைகளில் ஈடுபடும் பரீட்சகர்களுக்கு நாளாந்தம் 2,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, விடைத்தாள் மதிப்பீட்டிற்கு நிகழ்நிலை ஊடாக பரீட்சகர்களை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 8ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தின் ஊடாக தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 1.5 பில்லியன் டொலர் வழங்க உலக வங்கி உத்தரவாதம்

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு பெருந்தொகை கடனை வழங்க உலக வங்கி இணக்கம் வெளியிட்டுள்ளது.

அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கைக்கு கிட்டத்தட்ட ஒன்றரை பில்லியன் டொலர்களை வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது.

கடந்த வாரம் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதியின் பணிப்புரையாளர் சாகல ரத்நாயக்கவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்குப் பொறுப்பான உப தலைவர் மார்ட்டின் ரேஸர் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்த பின்னர் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதல் அளித்தவுடன் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் பணம் ஒதுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, முதல் பாகம் உடனடியாக வெளியிடப்படும் என்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

# வேகா கார்களுக்கு கிட்டியது அங்கீகாரம்

இலங்கையில்வேகாகார்களுக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி, நாட்டில் பதிவு செய்யப்பட்ட முதல் வேகா காருக்கான பதிவு இலக்கத்தகடு நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவும் கலந்துகொண்டார்.

இதன்போது மோட்டார் வாகன திணைக்கள ஆணையாளர் நாயகத்தால் வேகா காரை வடிவமைத்த ஹர்சுபசிங்கவிடம் குறித்த இலக்கத் தகடு கையளிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐநாவும் தமிழரும் ரஷ்யாவும்

அண்மையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் உக்ரைனால் கொண்டுவரப்பட்டது.

தனது நாட்டின் மீது ரஷ்யா தொடுத்துள்ள போர் நீதியற்றது என்பதால் அதனை உடனே நிறுத்தி ரஷ்யப் படையினர்தமதுசொந்தஎல்லைகளுக்குமீளவேண்டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. இலங்கை, இந்திய உள்ளிட்ட 34 நாடுகள் இந்தத் தீர்மானத்தின் மீது வாக்களிப்பதைத் தவிர்த்தன. வெறும் 7 நாடுகள் மட்டுமே ரஷ்யாவை ஆதரித்தன.

தீர்மானம் மிகப் பெருயளவில் வெற்றி பெற்றது. ஆனால் விளைவு என்ன? அந்தத் தீர்மானத்தின் பின் னர் உக்ரைனின் மற்றொரு நகரத்தைப் பிடிப்பதற்கான படை நடவடிக்கைகளை ரஷ்யா தொடங்கியுள்ளது. கார் கிவ் நகரத்தில் இந்த முன்னேற்றம் தொடங்கப்பட் டுள்ளது. இதனால் அந்தப் பகுதிகளில் இருந்து பொதுமக்களை வெளியேறிச் செல்லும்படிட உக்ரைன் படையினர் அறிவித்துள்ளனர்.

ரஷ்யா உக்ரைனில் போரைத் தொடங்கி பெப்ரவரி இறுதியுடன் ஒரு வருடம் கடந்துவிட்டது. அதற்கிடையில் ஐ.நா. பொதுச் சபையும் ரஷ்யா போரை நிறுத்தவேண்டும் என்று பல தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டன. ஆனால் அதற்கெல்லாம் மசிந்துகொடுக்க ரஷ்யா தயாராக இல்லை. அதனால் அது போரைத் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன.

ரஷ்யாவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வரும் இந்தியா, சீனா போன்ற நாடுகள் இந்தப் போரை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் வலியுறுத்துகின்றனவே தவிர, ஐ.நா. தீர்மானத்தால் எதனையும் சாதிக்க முடியவில்லை.

இப்படிப்பட்ட ஐக்கிய நாடுகள் பொது அவைக்கு ஈழத் தமிழர்கள் பிரச்சினையையும் கொண்டு சென்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்று மக்களை நம்ப வைத்து அரசியல் செய்வதற்கு இங்கே பல தமிழ்க் கட்சிகள் இருக்கின்றன. கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக இப்படித்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம் மூலம் எதையாவது சாதிக்க முடியும் என்று தாமும் நம்பிக்கொண்டு மக்களையும் ஏமாற்றிக் கொண்டு பல தமிழ்க் கட்சிகள் வலம் வருகின்றன.

மனித உரிமைகள் அவையின் பக்க நிகழ்வுகளிலும் சில கூட்டங்களிலும் பங்கொண்டு உரையாற்றி விட்டு இங்கே மக்களை நம்ப வைத்து அரசியல் நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது. சரியோ பிழையோ நித்தியானந்தாவே அதுபோன்ற அவைக்குத் தனது ஆட்களை அனுப்பி தமிழ்க் கட்சிகளின் மாயையைத் தவிடு பொடியாக்கியுள்ளார்.

ரஷ்யா பலமிக்க நாடு. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ எனப்படும் வெட்டதிகாரம் கொண்ட நாடு. அதனால் பொதுச் சபைத் தீர்மானங்களை எதிர்த்து நிற்க அதனால் முடியும், இலங்கை போன்ற சிரிய நாடுகளால் அப்படி நடக்கமுடியாது. ஐ.நா. பொதுச் சபையில் அல்லது பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றினால் அந்த அழுத்தத்தை இலங்கையால் தாங்க முடியாது, அதனால் அது ஒரு முடிவுக்கு, தீர்வுக்கு இணங்கி வரும் என்று இந்தக் கட்சிகள் மேலும் வியாக்கியானம் சொல்லக்கூடும்.

ஆனால், ஐ.நா. என்பது தமிழ்க் கட்சிகள் பலவும் தம்மை வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பாக அமைகின்றதே தவிர, தமிழர்களுக்கான தீர்வைத் தரும் களமாக அல்ல என்பதே யதார்த்தமாகின்றது.

# கல்முனை நிதி மோசடி பற்றி விசமத்தனமான பரப்புரைகள்

## அரசியல் காழ்ப்புணர்வே காரணம் என்கிறார் மேயர்



(அகீல்)

கல்முனை மாநகர சபை யில் இடம்பெற்றுள்ள நிதிக்கையாடல் தொடர்பில் உரிய நிர்வாக மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், மக்களால் நிராகரிக்கப்பட்ட சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, உண்மைக்குப் புறம்பாக விசமத்தனமான பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணிஏ.எம்.றகீப்விசனம் வெளியிட்டார்.

மாநகர சபை மேயர் அலுவலகத்தில் அவர் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை இதனைத்தெரிவித்தார். மாநகர சபை உறுப்பினர்களான சட்டத்தரணி றொான் அக்தர், ஏ.சீ.ஏ.சத்தார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் மேயர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றுள்ள நிதிக்கையாடல் மோசடி விவகாரம் தொடர்பில் நிர்வாக மற்றும் சட்டப்படியான அத்தனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

இந்த மோசடியில் ஈடுபட்ட இரு ஊழியர்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுளளனர். தலைமறைவாகியுள்ள அவர்களிருவரும் வெளிநாட்டுக்குத்தப்பி செல்ல முடியாதவாறும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மோசடி குறித்து மாநகர சபையில் விசாரணை நடத்த உயர் மட்டக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் மேயராகிய நானும், சபை உறுப்பினர்களும் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்ட சில விசமிகள், எம்மீது கொண்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக சில தினங்களாக இந்த விவகாரத்துடன் சம்பந்தப்படுத்தி விசமத்தனமான பரப்புரைகளைத் தொடுத்து வருகின்றனர்.

தம்மைப் புனிதர்களாகவும், கல்முஷ்யைக் காக்க வந்தவர்களாகவும் முகமூடிகளைப் போட்டுக;கொண்டு முகநூல்களிலும், வெளிப்பரப்பிலும் இவர்கள் இத்தகைய விசமத்தனத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

முழங்காலுக்கும் உச்சம் தலைக்கும் முடிச்சுப் போட முயலும் இப்பேர்வழிகள் என்னையும், உறுப்பினர்களையும் மட்டுமன்றி முஸ்லிம் காங்கிரஸின் தலைவரையும், பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அவர்களையும்கூட சம்பந்தப்படுத்தி தமது விசமத்தனம் செய்கின்றனர்.

எம்மீது சேறு பூசுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால்மக்கள்தெளிவாகவேயுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் நடைபெற்றுள்ள நிதி மோசடி விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் கண்டிப்பான எமது செயற்பாடுகள் தொடரும்– என்றார்.உறுப்பினர்களான சட்டத்தரணி றொான் அக்தர், ஏ.சீ.ஏ.சத்தார் ஆகியோரும் கருத்து வெளியிட்டனர்.

# அனைத்து அரச பணியாளர்களுக்கும் 20 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு

## வழங்குமாறு ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை

அரசபணியாளர்களுக்கு 20 ஆயிரம் ரூபா விசேட கொடுப்பனவு வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் அரச மற்றும் அரை அரச தொழிற்சங்கங்களின் கூட்டு ஒன்றியம் நடத்திய ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அரசாங்கத்திடம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாழ்க்கை செலவு அதிகரிப்பால் அரச சேவை பல பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் வரை விசேட கொடுப்பனவை வழங்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

அனைவரின் அடிப்படை வேண்டுகோள், 20 ஆயிரம் ரூபா விசேட உதவித்தொகை வேண்டும். சம்பளம் அதிகரிக் கப்படும் வரை அதனை வழங்க வேண்டும்.

எனவே, கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு பிரச்சினைக்குத் தீர்வைப் பெறப்போவதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

அரச ஊழியர்களின் மாதச்சம்பளம் வாழ்க்கை செலவுக்கு போதுமானதாக இல்லாத நிலையில், வங்கிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கான வட்டி உயர்த்தப்பட் டுள்ளதோடு பாரிய அளவில் வரியும் விதிக்கப்பட்டுள்ளது. நாங்கள் அனைவரும் கூட்டாக இரண்டு அல்லது மூன்று பாரிய நடவடிக்கைகளை தெரிவு செய்துள்ளோம் என்பதையும், ரணில் ராஜபக் ஷ அரசாங்கத்துக்கும் ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்துக்காக குரைக்கும் நாய்களுக்கும் நாங்கள் நிச்சயமாக அந்த நடவடிக்கைகளுக்கு செல்வோம் என்பதையும் கூற விரும்புகிறோம் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வருமான வரிச்சட்டத்தை திருத்தக் கோரி, கடந்த முதலாம் திகதி நாடு முழுவதும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பாசக்கார தாய்

வவுனியாவில் மகனின் மரண செய்தி கேட்டு அதிர்ச்சியில் தாய் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா–நெடுங்கேணி பகுதியில் மாட்டுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர் உயிரிழந்துள்ளார்.

இதன்போது இராசரட்ணம் கனகராஜா என்ற 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மரண செய்தியை அறிந்த தாயாரான இராசரட்ணம் வீரம்மா என்ற 82 வயதுடைய முதியவரும் அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்த இருவரது மரண சடங்குகளும் கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் இடம்பெற்றது.

# ஆபிரிக்காவிற்கு வெளியில் வனவிலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கை தெரிவு

ஆபிரிக்காவிற்கு வெளியில் வனவிலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கையை ஃபோர்ப்ஸ் சஞ்சிகை தரப்படுத்தியுள்ளது.

உலக நாடுகளில் சிறுத்தைகளின் அடர்த்தியான பரம்பலைக் கொண்ட இடமாகவும் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளை விடவும் மிகச்சிறந்த பூனை இனங்களைக்கொண்டஇடமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக ஃபோர்ப்ஸ் குறிப்பிட்டுள்ளது.

ஆசியயானைகள், மயில்கள், நீர்எருமைகள், குரங்குகள் மற் றும் தேன் உண்ணி கரடிகளை அதிகம் கொண்ட தேசமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேப் காட்–இல் இருந்து டொமினிக்கன் குடியரசு வரை திமிங்கலங்களைப் பார்க்கக்கூடியதாக இருந்தாலும், இலங்கையில் மாத் திரமே எளிதில் நீலத் திமிங்கலங்களைக் காண முடியும் எனவும் ஃபோர்ப்ஸ் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பம் முதலே இலங்கை தனது தனித்துவமான சுற்றுலா சலுகைகள் மற்றும் இயற்கை அழகு காரணமாக தொடர்ந்து பலரதும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

முன்னதாக, பெரிய 7 பயணம்சமூக ஊடகத்தரவுகளின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் இன்ஸ்டாகிராம் பதிவுகளை செய்யக்கூடிய 50 இடங்களின் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் இருந்தது.

அத்துடன், பயண முக்கோணம் வெளியிட்ட, 2023ஆம்ஆண்டில்உலகில் பயணம் செய்ய சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்தது.

# பேருவளையில் காணாமல்போன யுவதி அதிகாலை சடலமாக மீட்பு!

பேருவளை பகுதியைச் சேர்ந்த 25 வயதான யுவதி ஒருவர் கடந்த முதலாம் திகதி நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியேறி காணாமல் போயிருந்த நிலையில், இன்று அதிகாலை பேருவளைக் கடலிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி கடந்த முதலாம் திகதி நள்ளிரவில் இருந்து காணாமல்போயிருந்தநிலையில், அவரைத் தேடும் பணியில் பேருவளை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் கடந்த மூன்று தினங்களாக ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறானநிலையில் நேற்று பிற்பகல் பேருவளை ஆழ்கடலில் பெண் சடலம் ஒன்று மிதப்பதாக மீனவர்கள் தெரிவித்ததையடுத்து பேருவளை - மருதானை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று பல மணித்தியாலங்கள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த போதும் நேற்று சடலம் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை.

இன்று அதிகாலை பேருவளை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் ஆழ்கடலில் பெண் ஒருவரின் சடலம் ஒன்று மிதப்பதாக மீண்டும் மீனவர்கள் அறிவித்ததை அடுத்து பேருவளை - மருதானை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சில மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று குறித்த சடலத்தைக் கரைக்குக் கொண்டு வந்தனர். காணாமல்போயிருந்த யுவதியின் தந்தை இது தனது மகள் என உறுதிப்படுத்தினார்.

அதன் பின்னர் மரண விசாரணைகளை மரண விசாரணைஅதிகாரிபர்ஸான் முன்னெடுத்ததுடன் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை வைத்தியசாலைக்கு சடலம் எடுத்துச் செல்லப்பட்டது.

குறித்த யுவதிக்கு கடந்த பல வருடங்களாக அவ்வப்போது மனநலம் பாதிக்கப்படுவதாகவும், அதற்காகப் பல ஆண்டுகளாகச் சிகிச்சைகளை மேற்கொண்டு வந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

## ஹொரணை கால்வாயில் சடலம் மீட்பு!

ஹொரணை, வாகவத்தையில்'மடஅல'எனப்படும் கால்வாயில் ஹொரணை பொலிஸார் இன்று காலை ஆணின் சடலம் ஒன்றைக் கண்டெடுத்துள்ளனர்.

குறித்த சடலம் இறந்தவரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர் வாகவத்தை பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய திருமணமாகாதவர் ஆவார்.

இவர் சில காலமாக மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்று அவரது உறவினர்கள் ஹொரணை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனா தடுப்பூசியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி கழுத்து நெரித்துக் கொலை





## ரஷ்யாவில் அதிர்ச்சிச் சம்பவம்

கொரோனா தீநுண்மிக்கு எதிரான தடுப்பூசியைரஷ்யாவில்கண்டுபிடித்தவிஞ்ஞானிகளில் ஒருவரான ஆன்ட்ரி போடிகோவ், அவரது குடியிருப்பில் கழுத்து நெறித்துக் கொலை செய்யப்பட்டார்.

அவர் குடியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பில், பெல்ட்டால் கழுத்து நெறித்துக் அவர் கொலை செய்யப்பட்டிருந்தார் என்றும் கொலையாளி என சந்தேகிக்கப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

47 வயதாகும் போடிகோவ், கமலேயா தேசிய ஆராய்ச்சி மையத்தின் சூழலியல் மற்றும் கணிதவியல் துறையின் மூத்த விஞ்ஞானியாகப் பணியாற்றி வந்தார். அவர் குடியிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பு வீட்டில் வியாழக்கிழமை அவரது உடல் கண்டெடுக்கப்பட்டதாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


2021ஆம் ஆண்டு இவருக்கு சிறந்த விஞ்ஞானிக்கான விருது வழங்கப்பட்டது.

கொரோனா பேரிடர் காலத்தில் 2020ஆம் ஆண்டு ரஷ்ய நாட்டுக்காக ஸ்புட்னிக் வி என்ற கொரோனா தடுப்பூசியை கண்டுபிடித்த 18 விஞ்ஞானிகளில் போடிகோவும் ஒருவர்.

முதற்கட்ட விசாரணையில், 29 வயது இளைஞர், போடிகோவுடன் நடந்த வாக்கு-வாதத்தின்போது ஒரு பெல்ட்டால் கழுத்தை நெறித்துக் கொலை செய்துவிட்டு தப்பியோடியது கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறுகின்றனர். கைது செய்யப்பட்ட இளைஞர் குற்றத்தை ஒப்புக் கொண்டார் எனவும், அவர் மீது மிக மோசமான குற்றவழக்குகள் ஏற்கனவே நிலுவையில் இருக்கிறது என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவிகளுக்கு விசம் ஈரான் எதிரிகளின் சதி

## இப்படிச் சொல்லியிருக்கிறார் அந்த நாட்டு அதிபர்



பள்ளி மாணவிகளுக்கு விசம் வைக்கப்பட்ட விவகாரத்தை எதிரிகளின் குழப்பத்தை ஏற்படுத்தும் சதித் திட்டம் என்று ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி விமர்சித்துள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ளகோம் பகுதியில் கடந்த மூன்று மாதங்களாக பள்ளிக்குச் செல்லும் மாணவிகளுக்கு தொடர்ந்து உடல் நலம் பாதிக்கப்பட்டு வந்தது. வயிற்றுவலி, தலைவலி, வாந்தி, மூச்சுவிடுவதில் சிரமம் போன்வற்றால் பாதிக்கப்பட்ட மாணவிகளில் பலர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மருத்துவப் பரிசோதனையில் அவர்கள் உடலில் நஞ்சு இருந்தது தெரிந்தது. மாணவிகளுக்கு விசம் கொடுக்கப்பட்ட தகவலை ஈரான் கல்வித் துறை அமைச்சகமும் உறுதி செய்தது.

மாணவிகள் கல்வி பயில்வதை தடுப்பதற்காக, மத அடிப்படைவாதிகளால் விசம் வைக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் சர்வதேச அளவில் கவனம் பெற்றது.

இந்த நிலையில், நிகழ்வு ஒன்றில் ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி பேசும்போது, இது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் சதி திட்டம். இதன் மூலம் நமது எதிரிகள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடையே அச்சத்தையும், பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்த முயல்கிறார்கள் என்று தெரிவித்தார்.

அந்த எதிரிகள் யார் என்று அவர் கூறவில்லை.

இருப்பினும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலைத்தான் ஈரான் எப்போதும் குற்றம்சாட்டும். இதனால், இம்முறை மறைமுகமாக ரெய்சி பேசி இருக்கிறாரா என்று மேற்கத்திய ஊடகங்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

முன்னதாக, இளம்பெண் மாா அமினியின் இறப்பைத் தொடர்ந்து ஈரானில் எழுந்த ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் சர்வதேச அளவில் பேசும்பொருளானது. இந்த நிலையில், பள்ளி மாணவிகளுக்கு விசம் வைக்கப்பட்ட விவகாரமும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



# எரிபொருள் கிடங்கு தீப் பிடித்ததில் இந்தோனேசியாவில் 17 பேர் சாவு

இந்தோனேசியாவில் எரிபொருள் சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் ஜகார்த்தாவின் வடக்கே அரசுக்கு சொந்தமான எரிபொருள் சேமிப்பு கிடங்கு உள்ளது.

இங்கு வெள் ளிக்கிழமை இரவு 8 மணியளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் எரிவாயு கிடங்கு அருகே வசித்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

50க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களும், 260 தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சுமார் 6 மணி நேரம் போராடி தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும் இந்த தீ விபத்தில் 17 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். மேலும் 51 பேர் காயமடைந்தனர். எட்டு பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களை மீட்புப் படையினர் தேடி வருகின்றனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு இந்தோனேசிய தலைநகரில் உள்ள பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் பாதிக்கப்பட்ட பகுதியில் வசித்த 1,000 க்கும் மேற்பட்டோர் தற்போது தற்காலிக தங்குமிடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# அமெ. அதிபர் பைடனின் தோல் புற்றுநோய் குணம்



அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு ஏற்பட்டிருந்த தோல் புற்றுநோய் பாதிப்பு சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை மருத்துவர் கெவின் தெரிவித்தார்.

இநதச் சிகிச்சை கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்த அவர், மேற்கொண்டு அவருக்கு சிகிச்சை தேவையில்லை எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது அதிபராக 2021ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறார் ஜோ பைடன்.

அவருக்கு வயது 80. இந்தச் சூழலில் அவருக்கு மார்பு பகுதியில் தோல் புற்றுநோய் பாதிப்பு ஏற்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் அது அகற்றப்பட்டுள்ளதாக மருத்துவர் கெவின் தெரிவித்துள்ளார்.

அதிபருக்கு ஏற்பட்ட புற்றுநோய் பாதிப்பு பரவக் கூடியது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நவம்பரில் அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் அதிபர் ஜோ பைடன் மீண்டும் போட்டியிட வாய்ப்புள்ளதாகச் சொல்லப்படுகிறது. அந்த திட்டத்தில் அதிபரும் இருப்பதாக அதிபரின் மனைவி ஜில் பைடன் சொல்லியுள்ளார். இருந்தாலும் முறைப்படியான அறிவிப்பு வெளியானால் மட்டுமே இது உறுதியாகும்.

# விண்வெளி நிலையத்தை அடைந்தனர் 4 வீரர்களும்

அமெரிக்கா, ரஷியா, ஐக்கிய அரபு அமீரக நாடுகளைச் சோந்த 4 விண்வெளி வீராகளை, பிரபல தொழிலதிபா எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் மூலம் சாவதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனா.

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணம், கேப் கனாவெரல் நகரிலுள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து, ஸ்பேஸ் எக்ஸின் ஃபால்கன் ராக்கெட் மூலம் வியாழக்கிழமை அனுப்பட்ட டிராகன் விண்கலம், சாவதேச விண்வெளி நிலையத்தில் வெள்ளிக்கிழமை வெற்றிக ரமாக இணைக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஸ்டீஃபன் போவன் மற்றும் வாரன் ஹோபாக், ரஷ்யாவைச் சோந்த ஆண்ட்ரே ஃபெத்யேவ், ஐக்கிய அரபு அமீரகத்தின் அல்-நெயாடி ஆகியோா அந்த விண்கலத்தில் இருந்தனா.

அங்கு ஏற்கெனவே தங்கி ஆய்வுகளை மேற்கொண்டு வந்த அமெரிக்காவின் ஃபிராங்க் ரூபியோ, ரஷ்யாவின் சொகேய் ப்ரோகோபியேவ் மற்றும் டிமித்ரி பீட்டலின் ஆகிய மூவருக்கு பதிலாக அவாகள் ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனா.

முன்னதாக, அந்த மூவரையும் ஆய்வு நிலையத்துக்கு 2022 செப்டம்பரில் அழைத்து வந்த ரஷ்யாவின் சோயுஸ்-எம்எஸ்22 விண்கலத்தில்விண்துகள்மோதிகசிவு ஏற்பட்டதால், அதன் மூலம் அவர்களால்பூமிக்குத்திரும்பமுடியாதநிலை ஏற்பட்டது.

இதனால், திட்டமிட்ட ஆறு மாதங்களுக்குமேல் அவாகள் ஆய்வு நிலையத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவாகளை பூமிக்கு அழைத்து வருவதற்காக, சோயுஸ்-எம்எஸ் 23 விண்கலம் கடந்த வாரம் அனுப்பப்பட்டது. இந்த நிலையில், சாவதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வுகளை தொடாந்து மேற்கொள்வதற்காக 4 வீராகளை ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் தற்போது அனுப்பியுள்ளது.

அந்த 4 பேரில் அல்-நெயாடி ஐக்கிய அரபு அமீரக நாட்டிலிருந்து சென்று சாவதேச விண்வெளி நிலையத்தில் மாதக் கணக்கில் தங்கப் போகும் முதல் விண்வெளி வீரர் ஆவார்.

# சவூதி கல்லூரிகளில் யோகா

சவூதிஅரேபியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில், மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் யோகக் கலை அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக அந்நாட்டு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சவூதி யோகா ஆணையத்தின் தலைவர் நௌஃப் அல்-மர்வாய் இது தொடர்பில் தெரிவிக்கையில், சவூதிஅரேபியாவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் யோகக் கலையை அறிமுகப்படுத்தும் வகையிலான ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்தாகவிருப்பதாகக் குறிப்பிட்டார்.

ஜெட்டாவில் நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய மர்வாய், சவூதிஅரேபியாவில் உள்ள ஏராளமான பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி யைமங்களில் யோகாவை அறிமுகப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

யோகா பயிற்சி மேற்கொண்டால் உடல் நலம் மிகுந்த பயன்களை அடைகிறது. உடல் மற்றும் மன நலத்துக்கு உகந்ததாக உள்ளது என்கிறார்.

# உக்ரைனுக்கு மேலும் உதவி

உக்ரைன் நாட்டிற்கு மேலும் 400 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஆயுத உதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் நேட்டோ படையில் உக்ரைன் சேருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுத்து ஓராண்டை கடந்துவிட்டது. இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பல வகைகளில் உதவி வருகின்றன.

அந்த வகையில் அமெரிக்கா, உக்ரைனுக்கு தொடர்ந்து உதவி வருகிறது. போரின் இடையே உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி, ஒருமுறை அமெரிக்கா சென்று ஜோ பைடனை நேரில் சந்தித்துப் பேசினார். அதுபோல சமீபத்தில் ஜோ பைடனும் திடீர் பயணமாக உக்ரைன் சென்றார். அப்போது 500 மில்லியன் டொலர் உதவியை பைடன் அறிவித்தார். இந்நிலையில், உக்ரைனுக்கு மேலும் 400 மில்லியன் டொலர் மதிப்புள்ள ராணுவ உதவியை அமெரிக்கா வழங்கியுள்ளது.



# வோர்ன் குறித்து சச்சின் உருக்கம்

கிரிக்கெட் உலகின் ஜாம்பவானாக திகழ்ந்தவர், ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன். அவரது முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று. இந்தச் சூழலில் அவர் குறித்த நினைவுகளை உருக்கமான பகிர்ந்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரும், மற்றொரு ஜாம்பவானுமான சச்சின் டெண்டுல்கர்.

களத்தில் சில மறக்கவே முடியாத சண்டைகள் எம் இருவருக்கும் இருந்திருக்கின்றன. அதே அளவுக்கு மறக்க முடியாத தருணங்கள் களத்திற்கு வெளியேயும் இருந்திருக்கின்றன. ஒரு மிகச் சிறந்த கிரிகெட் விரராக மட்டுமன்றி, மிகச் சிறந்த நண்பராகவும் உனனை இழந்து தவிக்கின்றேன். உன் நகைச்சுவை உணர்வு மற்றும் கவர்ச்சியின் மூலமும் சொர்க்கத்தை இன்னும் அழகான இடமாக மாற்றியிருப்பாய் வோர்னி. என சச்சின் தனது உணர்வுகளைப் பகிர்ந்துள்ளார்.

வோர்னும் தானும் தனித்திருக்கும் அழகிய தருணத்தைக் காட்டும் ஒளிப்படம் ஒன்றையும் சச்சின் பகிர்ந்திருக்கிறார்.

வோர்ன் குறித்து கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் அவரது நினைவுகளை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்காக 1992 முதல் 2007 வரையில் சர்வதேச கிரிக்கெட் களத்தில் வார்னே விளையாடினார். 145 டெஸ்ட் மற்றும் 194 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அவர் விளையாடி உள்ளார். மொத்தமாக 1001 விக்கெட்டுகளை சர்வதேச கிரிக்கெட்டில் அவர் கைப்பற்றினார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை அணியின் சுழல் மன்னர் முத்தையா முரளிதரனுக்கு அடுத்ததாக அதிக இலக்குகளைக் கைப்பற்றிய சாதனையாளன் வோர்ன்.

# “அதிலென்ன தவறு?”

## ஆடுளம் களம் குறித்து ரோகித் கேள்வி



இந்தியாவில் சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களிலேயே விளையாடத்தான் விரும்புகிறார் என்று இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டை 9 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணி வென்றது.

இந்த ஆடுகளம் முற்றிலும் சுழல் பந்து வீச்சாளர்களுக்கு மட்டுமே சாதகமாக இருந்தது. இதனால் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகின்றது. இது ஒரு மிக மோசமான பிட்ச் என்று ஐசிசி அறிவித்துள்ளது.

இது பற்றி இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவித்ததாவது:

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இதுபோன்ற, சுழற்பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களிலேயே நாங்கள் விளையாட விரும்புகிறோம். இதுதான் எங்கள் பலம். சொந்த மண்ணில் விளையாடும்போது உங்கள் பலத்துக்கு ஏற்றவாறுதான் விளையாடுவீர்கள். வெளியே என்ன சொல்வார்கள் என்பதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. இ

ந்தியாவுக்கு வெளியே, அவரவர் பலத்துக்கு ஏற்றாற்போல்தான் விளையாடுகிறார்கள். எங்களுடைய பலமான சுழற்பந்து வீச்சுக்கு உகந்த ஆடுகளங்களில் நாங்கள் இங்கே விளையாட விரும்புகிறோம். அதில் என்ன தவறு? நாங்கள் எண்ணியது போல் முடிவுகள் கிடைக்காவிட்டால் வேறுவிதமாக யோசிக்கலாம். ஆனால் நாங்கள் நன்கு விளையாடுகிறோம். எங்களுக்குத் தேவை–யான முடிவுகள் கிடைக்கின்றன – என்றார்.

# மகளிர் பிரீமியர் லீக் இன்று தொடக்கம்



மகளிர் பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடர் மும்பையில் இன்று தொடங்குகிறது. தொடக்க ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் – குஜராத் ஜெயண்ட்ஸ் மோதுகின்றன.

மகளிர் பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடரானது இந்திய மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகள் தங்கள் விளையாட்டை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல பெரிய அளவில் உதவியாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக மகளிர் கிரிக்கெட்டையே அது இன்னொரு பரிமாணத்துக்கு எடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தத் தொடரில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, டெல்லி கேபிடல்ஸ், யுபி வோரியர்ஸ் ஆகிய 5 அணிகள் கலந்துகொள்கின்றன. மொத்தம் 21 போட்டிகள் நடைபெறுகின்றன. வெளித்தள்ளும் போட்டி 24ஆம் திகதியும் இறுதிப் போட்டி 26ஆம் திகதியும் நடைபெறுகின்றன.

இந்த மகளிர் கிரிக்கெட் திரு விழாவில் தொடக்க நாளான இன்று இரவு 8 மணிக்கு மும்பை டி.ஒய்.பாட்டீல் மைதானத்தில் நடை பெறும் ஆட்டத்தில் ஹர்மான்ப்ரீத் கவுர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, குஜராத் ஜெயண்ட்ஸ் அணியை எதிர்கொள்கிறது. மும்பை அணியில் இங்கிலாந்தின் ஸ்கிவர் பிரண்ட், வேகப்பந்து வீச்சாளர் இஸ்ஸி வாங், நியூஸிலாந்தின் அமிலா கெர், தென்ஆப்பிரிக்காவின் சோலி ட்ரையான், மேற்கிந்தியத் தீவுகளின் ஹேலி மேத்யூஸ், ஆஸ்திரேலியாவின் ஹீதர் கிரஹாம் ஆகிய நட்சத்திர வீராங்கனைகள் உள்ளனர்.

இதில் இந்திய அணியின் தலைவரான ஹர்மன்ப்ரீத் கவுர் 150, சர்வதேச ரி20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். கடைசி 3 ரி20 உலகக் கோப்பை தொடரிலும் கவுர் தலைமையிலான இந்திய அணி வெளித்தள்ளும் (நாக்அவுட்) சுற்று வரை சென்றிருந்தது.

குஜராத் ஜெயண்ட்ஸ் அணியானது உலகச் சாம்பியனான ஆஸ்திரேலியாவின் பெத் மூனி தலைமையில் களமிறங்குகிறது. இந்திய அணியின் நட்சத்திர வீராங்கனைகளான ஹர்லின் தியோல், சினே ராணா, சுஷ்மா வர்மா ஆகியோர் அணியில் உள்ளனர். இவர்களுடன் வெளிநாட்டு வீராங்கனைகளான ஆஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னர், ஜோர்ஜியா வேர்ஹாம் மேற்கிந்தியத் தீவுகளின் தியேந்திரா டாட்டின், இங்கிலாந்தின் சோபியா டங்க்லி ஆகியோரும் பலம் சேர்க்கின்றனர்.

# இந்தூர் பிட்ச் படு மோசம் ஐசிசி 3 புள்ளிகள் குறைப்பு

இந்தியா மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் விளையாடிய இந்தூர் கிரிக்கெட் மைதானத்தின் ஆடுகளம் மோசம் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் பிட்ச் மற்றும் அவுட்ஃபீல்ட் மானிட்டரிங் பிராசஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற் றது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட பார்டர்–கவாஸ்கர் கோப்பை தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரின் மூன்றாவது போட்டி கடந்த முதலாம் திகதி இந்தூரில் தொடங்கியது. இருந்தும், 2 நாட்கள் மற்றும் ஒரே செனில் இந்தப் போட்டியில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இரு அணியை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் இந்த ஆடுகளம் சொர்க்கபுரியாக திகழ்ந்தது. முதல் நாளில் 14 இலக்குகள், இரண்டாம் நாளில் 16 இலக்குகள் மற்றும் மூன்றாம் நாளில் 1 இலக்கு என மொத்தமாக 31 இலக்குகள் வீழ்ந்துள்ளன. இதில் 26 இலக்குகளை சுழற்பந்து வீச்சாளர்களே கைப்பற்றி இருந்தனர்.

இந்தூர் மைதானம் குறித்த அறிக்கையை ஐசிசி போட்டி நடுவர் கிறிஸ் பிராட் விடுத்திருக்கிறார். இரு அணிகளின் தலைவர்களுடனும் கலந்து பேசிய பிறகு அவர் இந்த அறிக்கையைத் தயாரித்திருந்தார். அதன் அடிப்படையில் தற்போது மூன்று டிமெரிட் புள்ளிகள் இந்தூர் மைதானத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராக அடுத்த 14 நாட்களுக்குள் பிசிசிஐ முறையிடலாம் என தெரிகிறது. ஐந்து ஆண்டு காலத்திற்குள் ஒரு மைதானம் ஐந்து அல்லது அதற்கும் மேலான டிமெரிட் புள்ளிகளைப் பெற்றால் அங்கு அடுத்த 12 மாதங்களுக்கு சர்வதேச போட்டி நடத்த முடியாத வகையில் ஐசிசியால் தகுதி நீக்கம் செய்யப்படும்.

ஆடுகளம் மிகவும் வறண்டு காணப்பட்டது. துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சிற்கு இடையில் ஒரு சமநிலையைப் பேணும் வகையில் ஆடுகளம் இல்லை. சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருந்தது. போட்டியில் வீசப்பட்ட ஐந்தாவது பந்தே ஆடுகளத்தின் மேற்பரப்பை தகர்த்தது. ஆட்டம் முழுவதும் அது போல அவ்வப்போது நடந்தது. சீம் அறவே இல்லை. பந்து கணிக்க முடியாத அளவுக்கு எழும்பி வந்தது என கிறிஸ் பிராட் தெரிவித்துள்ளார்.

# துபாய் டென்னிஸ் போட்டி அரையிறுதியில் ஜெகோவிச்



துபாய் டூட்டி ப்ரீ டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி அரையிறுதிச் சுற்றில் ஜெகோவிச்-மெத்வதேவ், ருப்லேவ்-அலெக்சாண்டா வெரேவ் ஆகியோா மோதுகின்றனா.

துபையில்நடைபெற்றுவரும்இப்போட்டியின் ஒரு பகுதியாக வியாழக்கிழமை இரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் 5 முறை சாம்பியனான ஜெகோவிச் 6-3, 7-5 என போலந்தின் ஹீயுபாட் ஹாக்காஸை வென்றார்.


மற்றொரு காலிறுதியில் ரஷ்ய வீரா டேனில் மெத்வதேவ் 6-3, 6-2 என நோசெட்களில் போர்னா கோரிச்சை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதியில் நடப்பு சாம்பியன் ஆன்ட்ரெ ருப்லேவ் 6-3, 7-6 என போட்டிக் ஸான்ட்ஸ¬ல்ப்பை வென்றார்.

ஜொமன் வீரா அலெக்சாண்டா வெரேவ் 7-5, 6-4 என லாரென்ஸோ சோனேகோவை வீழ்த்தினார்.

# ”என் மீது நம்பிக்கை வைத்தேன்”

## நாதன் லயன் தெரிவிப்பு



இந்தியத் தொடரில் ஆஸ்திரேலிய அணி முதல் இரண்டு ஆட்டங்களில் ஆஸ்திரேலிய அணியின் செயல்பாடு சற்று சுமாராக இருந்தாலும் மூன்றாவது ஆட்டத்தில் முழுக்க முழுக்க தனது ஆதிக்கத்தை செலுத்திய ஆஸ்திரேலியா அணி இந்த தொடரில் முதல் வெற்றியைப் பதிவுசெய்தது. வெற்றிக்கு மிக முக்கிய காரணமாக நாதன் லயன் திகழ்ந்தார் என்பதனாலே அவருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது. ஆட்டம் முடிந்து தனது சிறப்பான பந்துவீச்சுக் குறித்துப் பேசிய நேதன் லயன் தெரிவித்ததாவது: இந்த டெஸ்ட் கிரிக்கெட் தொடர் எங்களுக்கு ஒரு குறிப்பிட வேண்டிய தொடராக மாறியுள்ளது. முதல் இரண்டு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்த பிறகு இந்த போட்டியில் ஒரு அணியாக மீண்டும் வந்து சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி வெற்றி பெற்றதில் மிகவும் பெருமையாக இருக்கிறது.

மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கியதும் எங்களது அணி வீரர்கள் மிகச் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியை பெற்றுத் தந்துள்ளனர்.

இந்த போட்டியில் எனது சிறப்பான பந்து வீச்சுக்காக நான் எந்த ஒரு மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை. எப்பொழுதுமே நான் என்னுடைய பந்துவீச்சின் மீது நம்பிக்கை வைத்துள்ளேன். அப்படி நம்பிக்கை வைத்து பந்து வீசியதாலயே இந்த போட்டியில் எனக்கு இலக்குகள் கிடைத்தன.

நாம் நமது சிறப்பான பந்துவீச்சை உலக தரம் வாய்ந்த வீரர்களுக்கு எதிராக வெளிப்படுத்தும்போது உண்மையிலேயே அது நமக்கும் சவாலாக இருக்கும். அந்த வகையில் இந்திய ஆடுகளங்களின் தன்மையைப் புரிந்துகொண்டு இந்திய அணிக்கு எதிராக என்னுடைய சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தியதாலே இலக்குகளை வீழ்த்த முடிந்தது. அதிலும் குறிப்பாக விராட் கோலி, புஜாரா போன்ற சிறந்த வீரர்களுக்கு எதிராக பந்துவீசும்போது உண்மையிலேயே அது நமக்கு சவாலாகவும். விறுவிறுப்பாகவும் இருக்கும் –என்றார்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.03.2023 இல் வெளியிடப்பெற்றது.